www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# வெளிச்சம்

பங்குனி-1994
விலை - 20/=



வெளிச்சத்தின் அடுத்த இதழ்

**வெள்ளி இதழ்.**

அதிக பக்கங்கள்
அழகான ஓவியங்கள்
தலை சிறந்த அறிஞர்கள்
கலைஞர்கள்
கவிஞர்கள்
படைப்பாளிகள் தரும்
இலக்கிய விருந்து

வெள்ளி இதழில்
விருந்து படைப்பவர்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


25 வருடங்களாக மின் ஒளி அனுபவத்தில்
மிளிர்பவர்கள்

கோவில் திருவிழாக்கள்
திருமண வைபவங்கள்
அரங்கேற்றங்கள்
இசை விழாக்கள்
மற்றும் உங்கள் அனைத்து விழாக்களுக்கும்
மின் ஒளி வழங்க
அழைத்து மகிழுங்கள்

இரத்தினபுரி என்று மனதை மயக்கும்
ஒளிவெள்ளம் பாய்ச்சி
உங்கள் உள்ளத்தைக் கொள்ளை
கொள்ளுபவர்கள்

# மனோ லைற்

தொடர்பு கொள்ளுங்கள்

## மனோ லைற்

மனோகரன்
கோப்பாய்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேகம் விளையாடும்—இங்கு
மின்னல் பூச்சூடும்
ஈரக்கடலலை ஆரத்தழுவிடும்
கோணமலைச் சிகரம்—தமிழ்
ஈழத் தலைநகரம்.

மல்லிகைப் பூக்களை நுள்ளிய காற்றிடை
மாங்குயில் இசைபாடும்—இங்கு
வெள்ளலை துள்ளிடும் வேகத்தில், மேகத்து
வெள்ளிகள் சதிராடும்

எங்களின் தாயகம் எதிரியின் காலிடை
என்றபின் தூங்குவதா?—அட
சிங்களன் கைகளில் திருமலை போனபின்
இங்கிருந் தேங்குவதா?

தலைவனின் பாதையில் தலைநிமிர்ந்தாடுவோம்
தலைநகர் எட்டுமடா — எந்த
விலைகொடுத்தாயினும் வேங்கைகள் பாய்ந்திடும்
விடுதலை கிட்டுமடா.

—மாலிகா—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெளிச்சம்

பங்குனி - 1994
இதழ் - 24

ஸ்ரீலங்காவில் இந்தியத் தூதுவராகவும், பின்னர் இந்தியாவின் வெளிவிவகாரத்துறைச் செயலாளராகவும், இந்திராகாந்தி தொடக்கம் நேற்றுவரை இந்தியஅரசை ஆட்டும் சூத்திரதாரிகளில் ஒருவராகவும், இந்தியப்படைகள் தமிழீழத்தில் நடத்திய நரவேட்டையான உயிர்ப்பலி வேள்விக்கு உரிமைகோர வேண்டியவர்களில் ஒருவராகவும் இருப்பவர் ஜே. என் டிக்ஸித் அவர்கள்.

காஞ்சித் தரிசனத்தாலும் கங்கை நீராடலாலும் கழுவ முடியாத பாவச்சுமையை இவரது முதுகு சுமந்துள்ளது பதவியில் இருந்த காலத்தில் பலதடவைகள் ஈழத்தமிழரின் தேசியவிடுதலை இயக்கமான விடுதலைப்புலிகளை எள்ளி நகையாடியும், எடுத்தெறிந்து பேசியும் அவமானப்படுத்தியவர் இந்த ஜே. என். டிக்ஸித்.

'பிரபாகரன் சின்னப்பொடியள் சிலரின் குழுத் தலைவர்' என்று அதிகார தோரணையில் வசைபாடிய வாய் இவரது வாய். தமிழீழத்தின் இறைமைக்கான எமது போராட்டத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் இல்லாதழிக்க முனைப்போடு செயலாற்றிய மூலவர்களில் இவர்தான் முக்கியமானவர்.

அப்படியானவர், அண்மையில் 'இந்து'ப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டவை இன்று கவனிப்புக்குரியதாகி விட்டது.

'பிரபாகரன் தமிழினத்தின் தன்னிகரில்லாத் தலைவன்.
துணிவும் ஆற்றலும் மிக்கவர்'

என்றெல்லாம் சொல்லி எல்லோரையும் ஆச்சரியப்படுத்தியதோடு போறவழிக்குப் புண்ணியமும் தேட முயன்றுள்ளார்.

அஸ்தமனத்தில் சூரியோதயத்தைத் தேடுபவன்போல பதவிகள் துறந்து, இளைப்பாறும் காலத்தில் எல்லோருக்கும் விடியும் ஞானம் போல விடுதலைப்புலிகளையும், எமது தேசியத்தலைவரையும் பாராட்டி விதந்துரைத்துதிருப்பது எல்லோரினதும் புருவங்களையும் உயர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வைத்தது. இது ஏன் என்பதற்கு பலரும் பலவிதமான கருத்துக்களைக் கூறுகின்றனர்.

உண்மையை உரத்துக்கூறியதில், அதுவும் டிக்ஸித் வாயிலிருந்து உதித்த வார்த்தைகளிலுள்ள யதார்த்தத்தை உலகம் உணர்ந்து கொண்டுள்ளது. சத்தியமும், தளராமையும் உறுதியும் இறுதியில் வெல்லுமென்பதையே டிக்ஸித்தின் கருத்துக்கள் காட்டுகின்றன. முன்னரும் இந்தியப்படைகளை தமிழீழத்தில் வழிநடத்திய தளபதிகள் பலரும் விடுதலைப்புலிகளையும் எமது தலைவரையும் மனந்திறந்து பாராட்டியுள்ளமை இங்கு மனங்கொள்ளத்தக்கது.

என்றோ ஒருநாள் எமது விடுதலைப் போரையும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் இந்தியா ஏற்று அங்கீகரிக்குமென்று நாங்கள் திடமாக நம்புகின்றோம். பக்கத்திலுள்ள நாடு பாரம்பரியமான பலதொடர்புகளால் நீண்டகாலமாக நெருக்கமான நாடு, தமிழர்கள் அதிகம் வாழும் நாடு என்பதால் இந்தியாவிடமிருந்து நாமும் இதைத்தான் எதிர்பார்க்கின்றோம்.


இன்று டிக்ஸித்துக்குத் தெளிந்து புரிந்தது நாளை அனைத்து இந்திய அரசியல்வாதிகளுக்கும் நிச்சயம் புரியவரும். அப்போது அவர்களின் வாய்களும் இப்படியான வார்த்தைகளையே எடுத்துரைக்கும். ஏனென்றால், நாங்கள் தர்மத்தின்பக்கம், சத்தியத்தின் திசையில் நீதியின் நிழலில், நியாயத்தின் அரவணைப்பில் நிற்கின்றோம். சத்தியம் தோற்றதாகச் சரித்திரம் கிடையாது. எனவே நாங்கள் வெல்வோம். எந்த நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் இன்று திடமனத்துடன் சந்திப்போம். விடுதலையென்பதை போராடினால் தான் பெறமுடியும் என்று நம்பிக்கைகொள்வோம். உலகத்தின் பார்வையும், மனச்சாட்சியும் எங்கள் பக்கம் திரும்பும். அளப்பரிய ஈகத்தினால் சிவந்த எங்கள் தாயகம் விரைவில் விடியும். இங்கே வெளிச்சம் பரவும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்கு முறைக்கு எதிராக போராட வேண்டும்



*தமிழீழத் தேசியத் தலைவர்*
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

பெண் அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியாத எந்த ஒரு நாடும், எந்த ஒரு சமூகமும், முழுமையான சமூக விடுதலையை பெற்றதாகக் கூறமுடியாது. ஏனென்றால், பெண் விடுதலையே சமூக விடுதலையை முழுமை பெறச் செய்கிறது. பெண்கள் சுதந்திரமாக, கௌரவமாக, சமத்துவமாக வாழ வழிசெய்யும் ஒரு மக்கள் சமூகமே உண்மையில் விடுதலை பெற்ற சமூகமாக இருக்க முடியும். அந்த சமூகமே உயரிய பண்பாட்டின் உன்னத நிலையை அடைய முடியும்.

எமது போராட்டம் தேச விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. தேசத்தின் விடுதலையுடன் சமூக விடுதலையையும் இலக்காகக் கொண்டே நாம் போராடி வருகிறோம். சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கிறது. சகல ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்தும் தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும். அப்பொழுதே சமூக விடுதலையானது அர்த்தமுடையதாக முழுமை பெறமுடியும், என்பது எமது நிலைப்பாடு.

ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது தேசத்தின் நலன் கருதி, எமது மக்களின் நல்வாழ்வு கருதி, நாம் முற்போக்கான கொள்கைகளை வரித்து, போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். இந்தக்கொள்கைகளை மக்கள் பற்றிக்கொண்டு, அவற்றைச் செயற்படுத்த உறுதிபூண்டு, போராட்டத்தில் பங்கு கொள்ளும்பொழுதுதான் போராட்டம் வெற்றிப்பாதையில் செல்லமுடியும். எந்த ஒரு விடுதலை இயக்கமும் தனியாக நின்று, மக்களுக்குப்புறம்பாக நின்று, விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. அது, நடைமுறைச் சாத்தியமான காரியமுமல்ல. ஒரு விடுதலை இயக்கத்துக்குப்பின்னால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் அணிதிரண்டு, அந்த இயக்கத்தின் இலட்சியத்தில் பற்றுக்கொண்டு போராட்டத்தில் பங்கும் கொள்ளும் பொழுது தான் விடுதலை சாத்தியமாகிறது.

எமது சமூகத்தில் நிலவும் ஒடுக்குமுறை வடிவங்களை ஒழித்துக்கட்டி, சமத்துவத்தையும் சமூக நீதியையும் நிலைநிறுத்த எமது இயக்கம் திடசங்கற்பம் பூண்டிருக்கிறது. சமூக உறவுகளில் அடிப்படையான மாற்றத்தை நிகழ்த்துவதன் மூலமே இதனைச் சாதிக்க முடியும். இந்தச் சமூக மாற்றத்திற்கு முதற்படியாக சமூக விழிப்புணர்வு அவசியம். விழிப்புணர்வு பெற்ற மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியம். மக்களின் ஆதரவுடன், மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூக சீரமைப்புகளே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை. நீண்ட நெடுங் காலமாக, எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப்புரையோடி நிற்கும் சமூகக் கொடுமை. இந்த சமூக அநீதியை வேரோடு பிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதி பூண்டு நிற்கிறது. இந்த இலட்சியத்தை நாம் வெற்றிகரமாகச் சாதித்து முடிப்பதாயின் பெண்களின் ஆதரவும் பங்களிப்பும் அவசியம். தமிழீழப் பெண்ணினம் எமது விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து இந்த புரட்சியை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புற்று நிற்பதால், எமது சமூகத்தில் ஒரு புரட்சிகரமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சமூக மாற்றத்திற்கு ஏதுவான புறநிலை தோன்றியிருக்கிறது. இந்தப் புரட்சிகரமான வரலாற்றுச் சூழ்நிலையைப் பயன்படுத்தப் பெண்ணினம் தவறிவிடக் கூடாது. சமூகப் புரட்சிக்கான அக, புறச் சூழ்நிலைகள் கனிந்துள்ள இவ்வேளையில், பெண் விடுதலைக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்த பெண்கள் முன்வரவேண்டும்.

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டும். அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக் கட்ட முன்வரவேண்டும். இந்த வகையில், பெண் அடிமைத்தனத்திற்கு எதிராகப் பெண்களே போர்க்கொடி உயர்த்த வேண்டும்; போராட வேண்டும். இந்தப் போராட்டம். ஒரு தேசிய விடுதலை அமைப்பின் பக்கபலத்துடன் முன்னெடுக்கப்படுமானால் அது வலுமிக்க சக்தியாக வெற்றியைப் பெற்றுத்தரும்.

இன்று, எமது தேசிய விடுதலைப் போராட்டம் புதிய சவால்களையும், புதிய நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நிற்கிறது. என்றுமில்லாதவாறு சிங்களப் பேரினவாதசக்திகள் ஓரணியில் ஒன்று திரண்டு, தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிட கங்கணம்கட்டி நிற்கின்றன. தமிழ் மக்கள் மீது தொடர்ந்து சாவையும் அழிவையும் கட்டவிழ்த்துவிட்டு தமிழர் நிலத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில், பெரியதொரு போருக்கான தயாரிப்பு வேலையையும் சிங்கள அரசுமேற்கொண்டு வருகிறது.

அன்றுதொட்டு இன்றுவரை, கடந்த நாற்பது ஆண்டுகளிற்கு மேலாக சிங்களப் பேரினவாதம் இராணுவத்தீர்வுக்கே முதலுரிமை கொடுத்து வருகிறது. யுத்தத்திலும் ஆயுதஅடக்குமுறையிலும் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகிறது. சமாதானப்பாதைகளை மூடிவிட்டு வன்முறை மார்க்கத்தையே கடைப்பிடித்து வருகிறது. நீதி கேட்டுப் போராடும் எமது மக்களிற்கு எதிராக மிகவும் கொடூரமான அநீதிகளைப் புரிந்து வருகிறது. பௌத்த தர்மத்திற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இழுக்கை ஏற்படுத்தும் மகாபாதகச் செயல் களைப் புரிந்து கொண்டு தமிழரின் உரிமைப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' என வர்ணித்தும் வருகிறது.

அன்று தொட்டு இன்று வரை தமிழரின் போராட்டம் அறவழியைத் தழுவி நிற்கி றது. அகிம்சை வழியிலும் சரி, ஆயுதவழி யிலும் சரி தமிழர் வரித்துக்கொண்ட போராட்டம் தர்மத்தின் நியமத்தில் நெறிக் கப்பட்டிருக்கிறது. இந்தத் தார்மீக அடிப் படையே எமது போராட்டத்தின் ஆன்மீக பலமாகவும் இருந்து வருகிறது.

நாம் சமாதானத்தின் கதவுகளை அடைத்துவிடவில்லை. சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பாதை களை மூடிவிடவில்லை. சமாதான வழி மூலம் எமது மக்களிற்கு நீதி கிடைக்கு மானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நல்லெண்ண நோக்குடன் இங்குவரும் சமா தானத் தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்று வருகிறோம். போரை நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயா ராக இருக்கிறது என்பதை நாம் இவர் களுக்கு மேலும் மேலும் வலியுறுத்தி வருகி றோம். எமது நல்லெண்ணத்துக்குச் சான் றாக சமாதான சமிக்ஞைகளைக் காட்டவும் நாம் தவறவில்லை.

எமது நோக்கத்தையும், நிலைப்பாட் டையும் சர்வதேச சமூகம் இன்று நன்கறி யும். சமாதானத்தின் பாதைக்கு முட்டுக் கட்டையாக நிற்பவர்கள் யார் என்பதை யும் உலகம் நன்கறியும் உலகத்தின் சமா தான முயற்சிகளுக்கும் ஊறு விளைவிப்பவர் கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும்.

மனித உரிமைக்கும், மனித நீதிக்கும், சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது உரிமைகேட்டு, நீதிகேட்டு சமாதான வழியில் தீர்வுகேட்டுநிற்கும் எமது மக்களிற்கு சார்பாகக் குரலெழுப்ப வேண்டும். இதுவே உலகத்தின் இன்றைய தார்மீகக்கடப்பாடாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடாத்தும் பெண்கள் எழுச்சி நிகழ்ச்சிகளுக்கு எனது நல்லாசி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(08.03.1994 அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வெளியிட்ட அறிக்கை)

**வெளிச்சம்**
கலை, இலக்கிய சமூக இதழ்

இதழ் அமைப்பு:
**இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்**

அட்டை ஓவியம்:
**ராதா கிருஷ்ணன் (கோபாலி)**

மரபுப்படிமம்:
**ஆனந்தன்**

அச்சு:
**ம. மரியதாஸ்**

உருவாக்கம்:
**ஆசிரியர் குழு**

வெளியீடு:
**விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலரத் துடிக்கும் பொழுதும் ஒரு தூக்கம் வராத கவிஞனும்




புதுவை இரத்தினதுரை

நேற்றும் காற்றில்லாப் புழுக்கம்.
கழுத்து வியர்வையால் தலையணை நனைந்து,
மேனி பிசுபிசுத்த போது கண்களைத் திறந்தேன்.
நேரம் என்னவாக இருக்கும்?
அடுத்தவீட்டுக் கடிகாரமணிக்காகக் காத்திருந்தேன்.
தூரத்தில் வீரிட்டு ஒருபிள்ளை அழுதது.
தாயின்முலை வாயில் புகுந்ததோ?
அழுகையை நிறுத்தி அமைதியானது.
எழுந்து முற்றத்துக்கு வந்தேன்.
ஊமை நிலவு மேகமரங்களுக்குப் பின்னால்
ஒழித்து விளையாடியது?
அடுத்த வளவுச் சடைத்த வேம்பில்
வௌவால்கள் விழுந்து கொண்டிருந்தன.
கசக்கும் மரத்தின் பழங்களுக்காக,
இவைகள் தங்களுக்குள் ஏன் கடிபடுகின்றன?
எனக்கு எரிச்சல் வந்தது.
என்றாலும் என்ன செய்யமுடியும்?
மண்டதீவு இராணுவ முகாமில்
அவர்கள் விழித்திருக்கின்றார்கள்
என்பதைச் சொல்லி ஓரிரண்டு வெடிச்சத்தங்கள்
அதுவும் பின்னர் அடங்கிப்போனது.
அயலை எழுப்பி,
உறக்கம் கலைத்து,
பயணம் சொல்லிப் போவதுபோல,
பக்கத்திருக்கும் பருத்தித்துறை வீதியால்
மண்ணெண்ணையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மரக்கறி எண்ணையும்
கலந்து குடித்த வாகனம் ஒன்று
இரவின் எழிலை இல்லாதழித்து
உறுமிக்கொண்டு ஓடிச்சென்றது.
என்னுள் மீண்டும் எரிச்சல் முளைத்தது.
அடுத்தவீட்டுக் கிணற்றில் இருக்கும்
கப்பியும், கயிறும் புணரும் சத்தம்
"மனோன்மணி அம்மன்" கோவில் குருக்கள்
குளிக்க வந்ததைக் குறிக்கும் சத்தம்
அப்படியாயின் மூன்று மணியா?
ஐயமே இல்லை மூன்று மணிதான்.
வழக்கம்போல நாய்கள் குரைக்க,
கையில் விளக்கேந்தியபடி
பூப்பறிக்கும் பண்டாரம் வந்து,
முற்றத்து தேமா மரத்தை
மொட்டை அடித்துவிட்டுப் போனார்.
நல்லூர்மணி நான்கு மணிக்கு அடித்தது.
நாதவெள்ளம் காதை நிறைத்து,
வேதனைகளை வெளியேற்றியது
நெஞ்சில் இருந்த நெருஞ்சி முட்கள் வெளியே வந்தன.
மூச்சு இலகுவாகி சுவாசம் சீரானது.
"வேல் வேல் முருகா வெற்றி வேல் முருகா"
உரத்துப் பாடியபடி
வெளி வீதியை,
தானே விலைக்கு வாங்கியவன் போல
ஒருவன் சொந்தம் கொண்டாடியபடி சுற்றிவந்தான்.
அயலிலுள்ள கிணறுகள் எல்லாம்
ஆரவாரப்பட்டன.
கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கிய போது
காகங்கள் வந்து கத்தித் தொலைத்தன.
இரவில் இருக்கும் சுகமும், அழகும்
பகலில் தொலைந்து போவது எங்கே?
நாளையும் விடியும் தானே!
அதற்காகக் காத்திருப்பேன்.
அநுபவிப்பதிலும் பார்க்க
காத்திருப்பது சுகமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# இன்னும் அதே!

**இயல்வாணன்**

புகையிரதப் பாதையைக் குறுக்காக வெட்டும் மதகில் தம்பரப்பா அமர்ந்திருந்தார். ஒரு காலை மதகின் கீழாகத் தொங்க விட்டபடி, மறுகாலை மடித்தவாறு மதகில் குனிந்து நிமிர்ந்து கத்திதீட்டிக் கொண்டிருந்தார். பக்கத்தில் சரை ஒன்றில் கொஞ்சம் செங்கட்டித்தூள் இருந்தது.

என்னைக் கண்ட தம்பரப்பா திரும்பிப் பார்த்ததோடு தனது வேலையில் தொடர்ந்தும் ஈடுபட்டார்.

''அப்பு'' — அதே நிலையில் திரும்பிப் பார்த்தார்,

''காலிலை மம்பட்டி கொத்தி விட்டுது. எனக்குக் கொஞ்சம் சேர்வை தருவீங்களே...''

''எங்கை... பெரிய காயமே''

''சேச்சே... இந்தா, அடிக்காலிலை நீளத்துக்கு இழுத்து விட்டிட்டுது.''

''ம்... சேர்வை இறுகிப் போச்சுது. காச்சித்தான் போட வேணும். இரன், கொட்டிலுக்குப் போவம்... காயம் கொஞ்சம் பலப்பு கண்டியோ, மரமஞ் களும் அவிச்சுக்குடி......''

அவர் வேலையில் ஆழ்ந்தார். நிமிர்ந்தும் குனிந்தும், முன்னும் பின்னுமாய் உடம்பை ஆட்டியும் அவர் கத்தி தீட்டுவதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஹெலிகொப்ரர் ஒன்று உறுமிய படி பறந்தது.

''எங்கை...... எதைக் கொத்தப் போறானோ ..''

''இந்த எண்பது வரியத்திலை எத்தினையைக் கண்டிட்டம்...ம் .. வெள்ளைக்காரன், யப்பான்காரன், இந்தியன், சிங்களவன் ...''

- தனது தளர் மேனியைத் தடவிக் கொண்டார் அவர்.

''உந்தக் குண்டு வீச்சுகளையெல் லாம் அந்தக் காலத்திலை கண்டிருக்க மாட்டியள்... என்ன''

''ஏனில்லையடா மோனே... நாப் பத்திரண்டாம் ஆண்டே இதுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையிலை நடந்திட்டுது.''

கத்திதீட்டிய கைகள் விடுபட்டன. வானையளந்தார். பின் என்னைப் பார்த்தார்.

● ● ●

''அப்ப எனக்கு முப்பது வயசிருக்கும்... பங்குனி மாதம், எனக்கப்ப மூண்டாவது பிள்ளை பிறந்திருக்கு வீட்டிலை மனிசிக்குப் பத்தியம் அரைச்சுக் குடுக்கிறதுக்காண்டி என்ரை ஆச்சி வந்திருந்தவ. நாங்கள் றெயில் பாதைக்குக் கிழக்காலை, அந்தா தெரியுதே .. அத்தத் தோட்டந்தான் செய்தனாங்கள். பட்டை இறைப்பு, விடியக் காலமைரண்டு மணிக்கே போயிடுவம். துலாமிதிக்கத் தொடங்கினா, தண்ணி பாஞ்சு முடிய காலமை பத்துமணிக்கு மேலை போயிடும்.

''இப்பிடித்தான் ஒரு காலமை. சூரியன் நல்லா மேலை வந்தாப் பிறகு. கிராம சபையிலையிருந்து அழைப்பு வந்தது. நான் இறைப்பை அரை குறையிலை விட்டிட்டு, துலாவிலையிருந்து இறங்கி, பட்டையிலை அள்ளின தண்ணியிலை முகத்தைக் கழுவிப் போட்டு வீட்டை போனன். ஆச்சி பழஞ்சோத்தை எடுத்துத் தந்து கொண்டு, கறிக் கடையிலை பத்தியத்துக்கு குஞ்சு மீன் வாங்கி வா எண்டா, நான் பேசிப் போட்டு சாப்பிடாமலே வேட்டியைக் கட்டிக் கொண்டு சால்வையையும் தூக்கித் தோளிலை போட்டபடி கிராமசபைக்குப் போனன். அது எங்கடை வீட்டிலை இருந்து அரைமையில் தூரத்திலை மருதனாமடத்திலை இருந்தது.

''உள்ளுக்கை கிராமசபைத் தலைவரும், கிராமப் பிரதிநிதியளும் விதானைமாரும் வேறை சிலரும் இருந்தினை. எங்கடை கிராமப் பிரதிநிதியாய் நவரத்தினம் இருந்தார். என்னைக் கண்டோடனை. தனக்கருகிலை வந்திருக்கச் சொன்னார். போயிருந்தன். கொஞ்ச நேரத்திலை அரசாங்கக் கந்தோரிலையிருந்து மூண்டு பேர் வந்தினை.

''வந்தவையிலை கண்ணாடியோடை வந்தவர் இரண்டாம் உலக மகாயுத்தம் தொடங்கி விட்டுதெண்டும், அது இப்ப ஆசியாவின்ரை கிழக்குப் பக்கத்தாலை எங்களை நோக்கி வந்து கொண்டிருக்கெண்டும் சொன்னார். யப்பான் படையள் பினாங்துறை முகத்தைக் குண்டு வீசித்தகர்த்துப் போட்டுதுகளெண்டும். அந்தத் தாக்கம் இலங்கையையும் பாதிக்கும் எண்டதாலை ஆள்பதி சேர் அன்ட்றூ கல்டிகொட் உரிய நடவடிக்கையை எடுத்துள்ளாரெண்டும் அவர் சொன்னார்.

அரசாங்க ஏஜெண்டு மூலமாய் ஆள்பதியாலை எல்லா இலங்கைப் பிரசையளுக்கும் அறிவிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டிருக்கிறதெண்டும். நாடு முழுக்கலும் பின்னேரம் ஆறு மணியிலையிருந்து காலமை ஆறு மணி வரையும் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்குதெண்டும், இந்த நேரத்திலை பொதுமக்கள் வீடுகளிலை இருக்கிறது நல்லதெண்டும், இதுகளை விதானைமாரும் கிராமச்சங்கப் பிரதிநிதியகளும் சனங்களுக்கு அறிவிக்க வேணுமெண்டும் அவர் சொன்னார்,

''மற்றவர் எழும்பி, யப்பான் படையளின்ரை தாக்குதலிலையிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையைப், பாதுகாக்கிறதுக் காண்டி பிரிட்டிஷ் பேரரசிலை இருந்து சேர். யெவ்றிபேலற்றன் பிரபு கொழும் புக்கு வந்துள்ளார். அவர்தான் சகல அலுவலுகளுக்கும் பொறுப்பாய் பிரிட் டிஷ் அரசாங்கத்தாலை அனுப்பப்பட் டிருக்கிறார். ஆகாயப்படை, தரைப் படை, கப்பல்படை மூண்டுக்கும் அவர் தான் தளபதி. மூண்டுபடையும் அவருக் குக் கீழைதான் இயங்கும். ஆள்பதி யும், மந்திரிமாரும் அவற்றை வழிப் படுத்தலுக்குக் கீழைதான் யுத்தம் முடியிற வரைக்கும் கடமை புரிவினை எண்டு சொன்னார்.

''அவர் மக்களைப் பாதுகாப்பாய் இருக்கச் சொன்னதாய்ச் சொல்லிப் போட்டு பதுங்குகுழியள் அமைக்கிறது, விமானத்தாக்குதலிலை இருந்து மக்க ளைப் பாதுகாக்கிறது பற்றிச் சொல்லி பயிற்சியளும் வழங்கப்படுமெண்டார்.

அதோடை கூட்டம் முடிஞ்சுது ''கூட்டம் முடிஞ்சு வீட்டை வந்தா ஆச்சி பேசுறா, புள்ளயப் பெத்தா மட்டும் போதுமோ... அதுகள் காத்தையோ குடிக்கிறது எண்டு அறம் புறமான பேச்சு, அதோடை ஓடிப் போய் மீன் வாங்கியந்தனான், அதை விடு......''

''அதுக்குப் பிறகு ஒரு பத்துப் பதினைஞ்சு நாள் கழிய, யப்பான் காரன் நாசகாரிப் பிளேனாலை கொழும்பிலை குண்டு போட்டிட் டான் எண்டு செய்தி வந்தது. கொழும்பு துறைமுகத்தடியிலை குண்டு விழுந்து ரண்டு சரக்குக் கப்பலுகளும் கட்டடங்களும் நாசமானதாம், உடனை எங்களைக் கூப்பிட்டினை.''

''கிராம சபையிலை, அரசாங்கப் பிரதிநிதி கந்தோர் ஆக்கள் வந்திருந் தினை. யுத்தம் வந்தால் — யுத்தத் திலை மக்களைப் பாதுகாக்கிறதுக் கெண்டு ஏ. ஆர். பி எண்ட குழுவை அமைச்சினை. ஒவ்வொரு கிராமப் பிரதிநிதியளுக்கும் கீழை ஒவ்வொரு குழு. எங்கடை கிராமத்திலை நானும் இன்னும் நாலு பேரும்.''

''நாங்கள் ஊரிலை பதுங்குகுழி யள் வெட்டுறது .. மணியடிக்கிறது... அபாய ஒலி எழுப்பிறது போன்ற வேலையளைச் செய்ய வேணுமெண்டு சொல்லிச்சினை. நாங்கள் எங்களுக் கும் கீழை தொண்டர்கள் சில பேரை யும் சேத்திருந்தம்.''

ஏதாவது அசம்பாவிதம் எண் டால் கிராமக் கந்தோரிலை இருக்கிற பெரிய குழல் அபாய ஒலியை எழுப் பும். பா பா எண்டு அது பிலத்து ஒலிக்கத் தொடங்க, ஒவ்வொரு கிரா மத்திலையும் உயரமான மரங்களிலை கட்டியிருக்கிற மணியள் அடிக்கும். அப்ப சின்னக் குழலொண்டும் தந்தி ருந்தவை, அதையும் ஊதிக் கொண்டு போவேணும். இந்தச் சத்தங்களைக் கேட்டவுடனை சனங்கள் எல்லாரும் பதுங்குகுழியுக்கை இருக்க வேணும். அடுத்த சத்தம் வரும் வரைக்கும் எழும்பக் கூடாது.''

''என்னட்டை ஒரு குழலைத் தந்திருந்தினை. மண்ணெண்ணெய் வண்டில்காரன் கொண்டு திரியுறது போலை, வாய் அகண்டதாய் கூம்பு போலை இருக்கும். வாயிலை வைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிற பக்கம் ஒடுங்கிச் சின்னனாய் இருக்கும். அதை ஊதிக் கொண்டு— வீட்டிலையிருந்து''

''கிழக்காலையும் மேற்காலையும் வடக்காலையுமாய் ஒரு மைல் தூரம் போக வேணும். இந்தச் சத்தங்களைக் கேட்டிட்டு சனங்கள் பதுங்குகுழிய ளுக்கை பதுங்குவினை. ஊதி முடிய கிராமக்கந்தோருக்குப் போக வேணும். அவை பிறகு எப்ப ஊத வேணு மெண்டு சொல்லுவினை. அதுக்குப் பிறகு திரும்பவும் எல்லா இடமும் ஊத வேணும். அப்பிடி ஊதினாப் பிறகுதான் சனங்கள் பதுங்கு குழி யளை விட்டு எழும்பும். இப்பிடி யெல்லாம் ஏற்பாடு நடக்கேக்கை யப்பான் நாசகாரி திருகோணமலை யிலை குண்டு போட்டிட்டுது. வெள் ளைக் காரன்ரை கேமிஸ், வம்பயர் எண்ட ரண்டு யுத்தக் கப்பலுவள் கடலுக்கை மூழ்கிச்சுது. சீனன்வாடி யிலை இருந்த எண்ணைக்குதமும் தீப்பிடிச்சு எரிஞ்சிச்சுது.

''இதோடை எல்லா இடத்திலை யும் பதுங்குகுழி வெட்ட வேணு மெண்ட உத்தரவு வந்தது. நாங் களும் தொண்டர்களுமாய்ச் சேந்து ஊரிலையும், கறிக்கடையிலையும், பள்ளிக்கூடங்களிலையும் பதுங்குகுழி யளை வெட்டினம். அது மேனை, ரண்டு பக்கமும் வாசலுள்ளதாய் ''பானா'' வடிவிலை இருக்கும்.

''எங்கடை கோவில் மணியை யும் கழட்டி வந்து, ஊருக்கு நடுவிலை இருக்கிற உயரமான வேப்பமரத்திலை கட்டினம். அந்த மணிக்கு ஒருதர் பொறுப்பு.''

''ஊரிலை அப்ப ஒரு பறட்டை இலுப்பை மரம் இருந்தது. அதுக்குப் பக்கத்திலை விளையாட்டு மைதானம். நாங்கள் தாச்சி மறிக்கிறதும் வெள வால் கொடி கட்டுறதும் அதிலை தான். அந்த மரத்துக்குக் கீழை வைச்சு எங்களுக்குப் பயிற்சி தரப்பட் டுது. நாங்கள் ஒரு பத்துப்பேர். அரசாங்கப் பிரதிநிதி கந்தோரிலையி ருந்து வந்த ஒருதர்தான் பயிற்சி தந்த வர். குண்டு வீச்சாலை வீடுகள் இடிஞ்சா அதுகளுக்கை இருந்து ஆக்களை வெளியாலை எடுக்கிறது, காயங்களுக்குக் கட்டுப்போட்டு ஆஸ் பத்திரிக்குக் கொண்டுபோறது, பள்ளிக் கூடப் பிள்ளையளுக்குப் பயிற்சி குடுக் கிறது — இதுகளைப் பற்றி அவர் பயிற்சி தந்தார்.

''இப்பவும் சிரிப்பாயிருக்கு ..... ஹ ஹ ஹ ஹ ஹா... பயிற்சி முடிஞ் சாப் பிறகு ஒவ்வொருதரையும் பாத்து நீ என்ன செய்யப் போறாயெண்டு அவர் கேட்டார். எல்லாரும் ஒவ் வொண்டைச் சொல்லிச்சினை. உன்ரை கொப்புவின்ரை தேப்பன்ரை தம்பியார் முருகேசு... அவர் சொன் னார் எரிஞ்ச வீட்டிலை முறிஞ்சதைப் பொறுக்கிறனெண்டு. வந்தவர் விழுந்து விழுந்து சிரிச்சார்.''

''அதுக்குப் பிறகு பள்ளிக்கூடங் களுக்குப் போய், குண்டு வீச்சிலை இருந்து எப்பிடிப் பாதுகாக்கிற தெண்டு பயிற்சி குடுத்தம். பிள்ளை யளுக்கு பஞ்சும் தடித்துண்டும் குடுத் தனாங்கள். பிளேன் சத்தம் கேட்டால் காதிலை பஞ்சை அடைஞ்சு கொண்டு, வாயிலை தடித்துண்டை வைச்சுக் கடிச்சுக் கொண்டு நிலத்திலை குப்புற விழுந்து படுக்க வேணும்; அல்லாட்டி பதுங்குகுழியுக்கை போயிருக்க வேணு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மெண்டு சொல்லி பயிற்சியும் குடுத்தம். அதோடை பள்ளிக்கூடங்களிலையும் மணியள் கட்டினம்.''

''இப்பிடி நாங்கள் றெடியாய் இருக்கேக்கை காங்கேசன்துறைக்கும் குண்டு போடப்போறானெண்ட கதை அடிபட்டுது. உந்தா, உந்தப் டவஸ்ரேசன் அப்ப இருக்கேல்லை. முந்தி உது சுடலை. பிறகு சுடலை இருந்த இடமெல்லாத்தையும் திருத்திப் போட்டு பிரிட்டிஷ் ஆமியள் வந்திருந்தினை. காங்கேசன்துறைக்கும் அடிவிழலாம எண்டதாலை பவஸ்ரேசன் காம்பிலை ஆமியள் குவிக்கப்பட்டுது. கொஞ்ச நாளிலை நூற்றுக்கணக்கா ஆகிவிட்டுது''

''பூனைக் கண்ணோடை தொப்பியும் போட்டுக் கொண்டு வெள்ளைக்காரக் கொமாண்டர் நிப்பான். அவனுக்குக் கீழை வேறையும் வெள்ளைக்கார ஆமியள் இருந்தினை. அதோடை நீக்ரோக் காப்பிலியளும், பஞ்சாபியளும், கூர்க்கா, நேபாளியளும் இருந்தினை. இடைக்கிடை தோட்டப்பக்கம் வருவங்கள். நாங்கள் பட்டையிலை றைக்கிறதைப் பாப்பங்கள் பக்கத்துத் தோட்டத்திலை சூத்திரறைப்பு. அதிலை போய்க் குளிப்பங்கள் சில நேரம் இளனி கேட்டு, வாங்கிக் குடிப்பான்கள். ஆனா அவங்கடை பேச்சு எங்களுக்கும், எங்கடை பேச்சு அவன்களுக்கும் விளங்காது. எங்களுக்குச் சவுக்காரம், சிக்கிரெட் தருவன்கள். வேண்டாமெண்டால் சிரித்து விட்டுப் போவான்கள்.''

''ஒரு நாள் பின்னேரம் நான் மனிசியையும் பிள்ளையளையும் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போக வெளிக்கிட்டுக் கொண்டிருந்தன். திடீரெண்டு மணிச்சத்தம் கேட்டுது. அது கேட்டதுதான் தாமதம் நான் குழலைத் தூக்கி விட்டன். வீட்டுக்காரரை கொட்டிலுக்குப் பக்கத்திலை வெட்டியிருந்த பதுங்குகுழியுக்கை போயிருக்கச் சொல்லிப் போட்டு, சைக்கிளிலை ஏறி ஊதிக் கொண்டு போனன்.

''குழல் சத்தத்தைக் கேட்டு ஒவ்வொரு குறிச்சியிலையும் மணியள் அடிக்கப்பட்டுது. சனமெல்லாம் விழுந்து கட்டிப் பதுங்குகுழியளுக்கை பதுங்கிச்சுது. கொஞ்ச நேரம் போக, எனக்குப் பின்னாலை தம்பர் .. தம்பர் எண்ட குரல் கேக்குது. திரும்பிப் பாத்தன் ஒராள் தலை தெறிக்க ஓடி வருகுது. சைக்கிளை நிப்பாட்டிப் போட்டுப் பாத்தா, சின்னப்பு ஓடி வாறான். அவன்தான் மணிக்குப் பொறுப்பு.''

வந்தவன் ''தம்பராணை நான் அடிக்கேல்லை. உந்த விசர்ச் செல்லத்துரையன்தான் அடிச்சவன். இப்ப என்ன செய்யிறது?'' எண்டான். சரி! பிழைச்சுப் போட்டுது. நீ போ எண்டு போட்டு, அவடத்திலை நிண்டு ஒரு சுருட்டை மூட்டினன். அதுக்குப்பிறகு வந்த வழியாலை திரும்ப ஊதிக் கொண்டு போனன். ரண்டாம் ஊதலுக்குப் பிறகுதான் சனங்கள் வெளிய வந்துதுகள். அடுத்தடுத்த நாள்தான் சனத்துக்கு உண்மை தெரிஞ்சுது.

● ● ●

தம்பரப்பா வானைப் பார்த்தார். இயக்கமற்று — விமானக்குண்டுகளால் சிதைந்திருந்த மின் உற்பத்தி நிலையத்தைப் பார்த்தார். ஒரு பெருமூச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுடன் என்னைப் பார்த்தார். பின்னர், வேகமாக... இன்னும் வேகமாகக் கத்தியைத் திட்டினார். திட்டியதை எடுத்து, மறுகையினால் துடைத்து விட்டுப் பார்த்தார். வெள்ளியாய் அது ஒளிர்ந்தது.

எழுந்தார். புகையிரதப் பாதைக்குக் குறுக்காக இறங்கிய மண்பாதையால் நடந்தார். அவரின் பின் நான். குண்டொன்றின் ஒலி அதிர்வுடன் எழுந்தது.

''என்ரை வாழ் நாளிலை இப்பிடி எத்தினையைக் கண்டிட்டன். அண்டைய பதுங்குகுழி வாழ்க்கை இண்டைக்கும் தொடருது. வெள்ளைய னுக்குக் கீழை இருந்ததை விட சிங்கள வனுக்குக் கீழை எவ்வளவு கஸ்டத்தை அனுபவிச்சிட்டம்.''

குடிலுக்குள் நுழைந்தவர் சேர்வை முட்டியை வெளியே எடுத்து வந்து பார்த்தார். அது இறுகிக்கிடந்தது.

''என்ரை வீட்டை நான்தான் ஆளவேணும். அதுவரையிலை இந்தப் பிரச்சனை முடியாதுமேனை'' அவர் உள்ளே போனார்.

தம்பரப்பாவின் கீதையை நான் உணர்ந்து கொண்டேன். ஹெலிகொப்ரர் பலாலிப் பக்கமாகத் திரும்பிக் கொண்டிருந்தது. ☐☐

---

எமது மக்களின் போர்க்கால வாழ்பனுபவங்களை கலை, இலக்கிய வடிவங்களாகச் சித்தரிக்க வேண்டும். இந்த வகையில் தான் கலை இலக்கியங்கள் காலத்தின் பதிவை செய்து கொள்ள வேண்டும்.

கலைஞர்கள் வாழ்க்கையை ஆழமாகப் பார்க்கிறார்கள். அவர்களது பார்வை மிகவும் உன்னிப்பானது கூர்மையானது. மக்களது வாழ்வையும், போராளிகளது உணர்வுகளையும் துல்லியமாக சித்தரிக்க கலைஞர்களால் முடியும். அத்தகைய படைப்பு இலக்கியங்கள் வாயிலாக விடுதலை உணர்வையும், தேசப்பற்றையும் கலைஞர்கள் தட்டி எழுப்ப வேண்டும்.

எமது மரபுவழிவந்த கலை வடிவங்கள் காலஓட்டத்தின் தேவைக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட வேண்டும். புதுமை சேர்க்கப்பட வேண்டும். பழமையில் புதுமை கலந்து இன்றைய வாழ்வு நிலையைப் பிரதி பலிப்பதாக கலை ஆக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலை, ஐதீகம் சமயம்

கலை, ஐதீகம் சமயம் என்பவற்றுக்கு இடையிலான தொடர்புகள் மிகச் சிக்கலானதும் ஆனால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மனிதப் பரம்பவியல், புதைபொருளியல் ஆய்வுகள் மேற்படி பிரச்சினைக்கு நேரடியான விடைகள் எதனையும் தரவில்லை. அன்றியும் தரப்படும் விளக்கங்கள் அனைத்தும் கருதுகோள் நிலைக்குரியதாகவே இருக்கின்றன. ஆர். கரோதி என்பார் பண்டைய கலையானது ஐதீகங்களுடனேயே ஆரம்பமாகின்றது எனக் கூறுவதும், எல். பிளேம் என்பார் சமயத்திலிருந்து கலையின் தோற்றத்தை எடுத்துக் காட்ட முயல்வதையும் இங்கு உதாரணமாகக் காட்டலாம் இவர்களது ஆய்வுகளின் படி அழகியலும் கலைக்கோட்பாடுகளும் சமயத்திலிருந்தும் ஐதீகங்களிலிருந்தும் தோற்றம் பெறுவதாகக் கூறப்படுகிறது.



சோ. கிருஷ்ணராஜா

உழைப்புப் பிரிவினை காணப்படாத புராதன சமுதாயத்தில் மிருகங்களை வேட்டையாடி மனிதன் உணவைப் பெற்றுக் கொண்டான். பல மனிதர் கூடியே வேட்டையாடியதால், அவர்களிடையே ஒரு விதமான தகவற்பரிமாற்ற சாதனம் வளர்ச்சி பெறலாயிற்று. உழைப்பிற்கான கருவி உற்பத்தியும் தகவற் பரிமாற்ற சாதனமாகிய மொழியின் வளர்ச்சியும் புராதனக் கலையின் ஊற்றாக விளங்கியதெனலாம். பலியோதிலிக் காலக் கலையானது வேட்டைக்கான உழைப்புடன் தொடர்பு கொண்டிருந்தது. இக்காலத்திற்குரியதாகக் கருதப்படும் குகைச் சித்திரங்கள் செய்தி பரிமாற்றுத் தன்மையைக் கொண்டிருந்தன. ரஷ்ய அறிஞரான இஸ்தெயின் என்பராது அபிப்பிராயப்படி செய்தி பரிமாற்றமே பண்டைச் சுவரோவியங்களின் அடிப்படை இயல்பு.

சுவரோவியங்கள் நயப்புடன் வரையப்பட்டன. கருவிகளில் அலங்காரம் இடம் பெற்றது. வெற்றிகரமான வேட்டைகள் ஒவ்வொன்றின் பின்னரும் உணர்ச்சி மேலீட்டால் நடனங்கள் ஆடப்பட்டன. இதுவே காலப்போக்கில் சடங்காக மாற்றமடைந்தது. வேட்டைக்கு முன்பதாக ஆடப்படும் நடனங்கள் விலங்குகளின் நடத்தையை விபரிப்பதாகக் காணப்படுகிறதென பூர்வ குடிகளின் பழக்க வழக்கங்களைப் பற்றி ஆராய்ந்த மனித இனப் பரம்பலியல் ஆய்வாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். மிருகங்களின் இயல்பு நடமாட்டம் என்பன பற்றிய அறிவு வேட்டையாடுபவர்களுக்கு இன்றியமையாதென்ற செயல் ரீதியான உண்மையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு முற்கால பலியோலிதிக் காலக் கலையானது உற்பத்தி உழைப்புடன் கூடவே தோன்றிய பொழுதும் காலப்போக்கில் மந்திரச் சடங்குகளுடன் தொடர்புடைய தாகியது. பிற்பட்ட பலியோலிதிக் காலத்திற்குரியதென அறியப்பட்ட பெருந்தொகையான கண்டுபிடிப்புக்கள் இக்காலக்கலையானது சடங்குடன் தொடர்பு பெற்றிருந்ததை எடுத்துக் காட்டுகிறது. பலியோலிதிக்கால மனிதனது அழகியல் நாட்டம் இருவகையான செல்நெறிகளில் சென்றதை அவதானிக்கலாம். ஒரு புறம் உழைப்புச் செயற்பாட்டுடன் அதில் குறிப்பாக உழைப்பிற்கான கருவி உற்பத்தியுடன் வேட்டைக்கான தயாரிப்பிலும் கலையம் சங்கள் இடம்பெற்றன. மறுபுறம் சடங்குடன் தொடர்புடைய தாய்க் காணப்பட்டது.

புராதன மந்திரச் சடங்குகளே சமயத்தின் ஊற்றாக விளங்கியது. சடங்குகள் அதன் சாராம்சத்தில் ஒரு வகையான மன வெழுச்சி வெளிப்பாடாக விளங்கியது. சடங்கின் உதவியுடன் புராதன மனிதன் தன் சூழலில் செல்வாக்குச் செலுத்த முயன்றான். சடங்குகள் அப்காலத் தொடர்புகளை மனிதனுக்கு ஏற்படுத்திக் கொடுப்பனவாகக் கருதப்பட்டன. மிகப்புராதன காலத்தில் சடங்குகளும் மந்திரங்களும் வழக்கிலிருக்கவில்லை என்றும் மிகவும் வளர்ச்சியடைந்த பிற்பட்ட காலத்திலேயே இவை தோன்றின எனவும் புதைபொருளாய்வுகள், மனிதப் பரம்பல் பற்றிய ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. தான் விரும்பிய பெறுபேற்றைப் பெறுவதற்கு சடங்குகள் உதவும் என்று மிகவும் பிற்பட்ட காலத்திலேயே மனிதன் நம்பினான். வேட்டையில் உணவு கிடைப்பதற்காக மனிதர் சடங்குகளை நிகழ்த்தினரென புதைபொருட்தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. உழைப்புச் செயற்பாட்டுடன் சடங்குகள் கொண்டிருந்த தொடர்பினை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. பல இனக்குழுக்களிடையே உழைப்பிற்கும் சடங்கிற்கும் இடையிலான தொடர்பு காணப்பட்டமைக்குரிய தரவுகள் பெறப்பட்டுள்ளன. புராதன வேட்டைக்காரன் தான் வேட்டையாட விரும்பும் மிருகத்தின் உருவை நிலத்தில் அல்லது மணலில் வரைந்து அதனைச் சுற்றி நடனம் ஆடினான். சில சந்தர்ப்பங்களில் முகமூடியிட்டு நாட்டியமாடினர். இவ்வாறு மனிதனின் கலை உணர்ச்சி சார்ந்த செயற்பாடுகளை உழைப்பு முயற்சிகள் வெளிப்படுத்தின. எனினும் புராதன மனிதன் தனது வேட்டையில் வெற்றிபெற முடியாதிருந்த சந்தர்ப்பங்களும் அடிக்கடியேற்பட்டது. திறமையும் ஆற்றலும் உடையனவாயினும் வேட்டையாடுபவனுக்கு மிருகங்கள் அடிக்கடி அகப்படாதிருந்தன. இதனால் சாதகமான பெறுபேறுகளைப் பெறுவதற்கு சடங்குகள் பயன்பட்டன. மனிதன் இயற்கையின் முன் தன் இயலாமையை உணர்ந்து கொண்டமையே சடங்கின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று என்று ரெயிலர் அபிப்பிராயப்படுகின்றார்.

புராதன சமுதாயத்தில் கலையும் சமயமும் பின்னிப்பிணைந்து காணப்பட்ட பொழுதும் அவையிரண்டினதும் சமூகப் பயன்பாடு வேறுபட்டன. கலையானது புராதன மனிதனின் ஆக்கச்செயற்பாட்டுடன் தோன்றி மனித ஆற்றலின் வளர்ச்சியுடன் கூடவே வளர்ச்சி பெற்று வரலாயிற்று. ஆனால் சடங்குகளோ இவ்வாறான சுயாதீனமான தோற்றத்தையும் வளர்ச்சியையும் கொண்டதல்ல. இயற்கை மீது ஆளுகை செய்வதற்குரிய மனிதனது ஒரு வகை உத்தியாகவே சடங்குகள் தோன்றின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிருகங்களைக் கைப்பற்றுவதற்கும், வசப்படுத்துவதற்கும் உரிய நம்பிக்கைகளாக சடங்குகள் காணப்பட்டன. எவ்வாறு தான் வெற்றிகரமாக வேட்டையாடினான். என்பதை நாட்டியத்தின் மூலம் புராதன மனிதன் வெளிப்படுத்தினான். புராதன மனிதன் முதிரா அறிவு நிலையிலுள்ளவனாக இலகுவில் உணர்ச்சிக்குள்ளாகும். தன்மை உடையவனாயிருந்தான். நடனங்கள் அவனது அழகியல் நாட்டத்தை நிறைவு செய்தன. கடந்த வேட்டையில் நடந்தவைகளைச் சித்திரமாகத் தன்குகைகளில் வரைந்தான். இவற்றில் கல்வி நிலைப்பட்ட நோக்கமே காணப்பட்டதெனலாம். வெற்றிகரமான வேட்டைகள் ஒவ்வொன்றின் பின்னரும் உணர்ச்சி மேலீட்டால் நடனங்கள் ஆடப்பட்டன. இதுவே பின்னர் சமயக்கூறுகளுடைய சடங்காக மாற்றமடைந்தது எனினும் நடனங்கள் தகவற் பரிமாற்றப்பண்பையும் பெற்றிருந்தன. மனித இனப் பரம்பயியலாளர்களின கருத்துப்படி வேட்டைக்குச் செல்வதற்கு முன்பாக முகமுடி அணிந்து ஆடும் நடனம் விலங்குகளின் நடத்தையினை விபரிக்கும் ஆட்டமாகக் காணப்படுகிறது. மிருகங்களின் நடத்தை பற்றிய அறிவு வேட்டையாடுபவர்களுக்கு இன்றியமையாததென்ற செயல்முறை உண்மையை இத்தகைய நடனங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன் கூடவே வேட்டைக்கான தயார்ப்படுத்தலையும், இளந்தலைமுறைகளுக்கு வேட்டையாடும் நுட்பங்களை பயிற்றுவிப்பதாகவும் அவை அமைந்தன.

புராதன மனிதனின் ஆன்மீக வாழ்க்கையானது முதன்முதலில் சடங்குகள் மூலம் புறவயப்படுத்தப்பட்டது. காலப்போக்கில் புறவயப்படுத்தப்பட்ட சடங்குகளை நியாயப்படுத்தும் வகையில் ஐதீகங்கள் எழலாயின. கோட்பாட்டு ரீதியான சிந்தனையின் ஆரம்ப வடிவமே ஐதீகங்கள். ஐதீகங்களின் முன்னோடியாக மந்திர நம்பிக்கைகளும் சடங்குகளும் விளங்கின. புராதன மனிதனுக்கு அவனது பகுத்தறிவுக்கு உகந்த வகையில் தன்னைச்சூழவுள்ள பற்றியும், தீட்டுக்கள் பற்றியும் எழுந்த பிரச்சினைகளுக்கு விடை காண முடியாதிருந்தது. அவை பற்றிய நம்பிக்கைகள் கற்பனையாகவும் கருத்துருவச் சிந்தனையாகவும் ஐதீகங்கள் என்ற பெயரில் இயற்றப்பட்டன.

உற்பத்தி முறை வளர்ச்சியின் ஓர் நிலையில் குலம் அல்லது, இனக்குழு என்ற சமூக நிறுவனம் தோன்றியது. புராதன மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இனக்குழு வாழ்க்கை முறை உதவியாயமையும் காலப்பகுதியில் மந்திரச் சடங்குகள் ஐதீக நம்பிக்கைகளாக மாறி இனக்குழுவின் தோற்றம் பற்றிய கதைகளாக வளர்ச்சியடைந்தன. இன்று எமக்குக் கூடியனவாயிருக்கும் ஐதீகங்களான லிங்கபுராணம், கூர்மபுராணம், விஷ்ணுபுராணம் போன்ற 18 புராணங்களும் மிகவும் பிற்பட்ட காலத்திற்குரிய திருந்திய வடிவங்களாகும். மனித இனப்பரம்பியலாளர்களின் அபிப்பிராயப்படி இனக்குழு வாழ்வைத் தழுவியதாக புராணக் கதைகள் தோன்றலாயின. அவுஸ்திரலாயிட் பழங்குடிகள் வாழ்க்கையை ஆராய்ந்த அறிஞர்கள் சடங்குகளுக்கும் ஐதீகங்களுக்கும் இடையில் தொடர்பிருப்பதாக எடுத்துக் காட்டுகின்றனர்.

ஐதீகமா, சடங்கா எது முதலில் தோன்றியதென ஒருவர் வினாவலாம். இதற்குரிய விடை மிகச்சிக்கலானது. ஐதீகக் கதைகள் சடங்கிலிருந்தே தோன்றியதென ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனால் மறுசாராரோ சடங்குகள் ஐதீகங்களை ஆதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாகக் கொண்டவை எனக் கூறுகின்றனர். சடங்குகளும் ஐதீகங்களும் பரஸ்பர தொடர்புடையன. ஐதீகங்கள் சடங்குகளாகவே நடைமுறைப்படுத்தப்பட்டன. யோலச் செய்தல் ஐதீகங்களைத் தோற்றுவித்தது. இரண்டும் ஏறக்குறைய ஒரே நேரத்தில் தோன்றியவை எனலாம். எனினும் ஐதீகங்களின் வளர்ச்சியினூடாக வியத்தகு நிகழ்ச்சிகளும் அதீத கற்பனைகளும் ஐதீகங்களை வளப்படுத்த; காலப்போக்கில் ஐதீகம் சடங்குடன் கொண்டிருந்த தொடர்பை அறுத்துக் கொண்டது. இன்று எமக்கு கிடைத்துள்ள ஐதீகங்களிற்கும், தொடக்க காலத்து ஐதீகங்களிற்கும், இடையில் பெருத்த வேறுபாடுகளுண்டு. ஒப்பீட்டளவில் இன்று கிடைக்கக்கூடியனவாயிருக்கும் ஐதீகங்கள் மிகப் பிந்திய காலத்தவை.

சமயத்தினதும், கலையினதும் வளர்ச்சியைப் பற்றியாராய்வதில் ஐதீகங்களுக்கு முக்கிய பங்குண்டு. ஐதீகங்களின் இயல்பு பற்றிய ஆய்வுகளில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே அறிஞர்கள் கவனம் செலுத்தி வந்துள்ளனர். புராதன மனிதன் ஐதீகக் கதைகளை உண்மை எனவே நம்பினான். கருத்துருவச் சிந்தனைகளை யதார்த்த நிலைமைகளுடன் இனங்கண்டு கொள்வதற்கு ஐதீகங்கள் உதவின. மனிதர் பற்றியும் மிருகங்கள் பற்றியுமே இன்று வழக்கொழிந்து போய்விட்ட பண்டைய ஐதீகங்கள் விவரித்தன. சூழலிலிருந்து தன்னை வேறுபடுத்தியறியமுடியா புராதன மனிதனுக்கு மிருகங்கள் மிக முக்கியமானவைகளாக இருந்தன. தன் வாழ்க்கைக்கு உதவியாயிருந்த மிருகங்களை தனக்கு சமமாகவே அவன் கருதினான். ஆனால் சடங்கிலிருந்து சமயம் உருமலர்ச்சி பெற்ற காலப்பகுதியில் குலம் சந்ததி பற்றிய தரவுகளும் ஐதீகத்தில் உள்ளடக்கப்பட்டன. எல்லா ஐதீகங்களும் சிருஷ்டி, சங்காரம், வம்சம், மனுவந்தரம் ஆகியவற்றை விபரிப்பதற்காகவே விஷ்ணு புராணம் குறிப்பிடுகிறது.

ஐதீகங்கள் பற்றிய ஆய்வில் இரு வகையான செல்நெறிகள் காணப்படுகின்றன. மனிதன் தன்னைச் சூழவுள்ள உலகு பற்றிய ஐதீகக் கதைகள் இயற்றினான் என்பது முதலாவதாகும். ஆங்கிலேய அறிஞரான ரெயிலர் இத்தகைய சிந்தனைப் போக்கின் முன்னோடியாவார். ஐதீகங்கள் பண்டைய மனிதனின் கலைத்துவமுடைய கற்பனையின் பெறுபேறாகுமென்பது இரண்டாவது போக்காகும். இக் கருத்தினை முன்மொழிந்தவர்கள் ஜேர்மானிய சிந்தனா கூடத்தைச் சார்ந்தவர்களாகும். ஐதீகங்கள் அவற்றின் சிறப்பியல்புகள் எல்லாவற்றிற்கும் மேலாக, சில பொதுவான சமூகப் பண்புகளையும் பெற்றிருந்தன. புராதன மனிதனின் நடமாட்டம் மிகவும் குறுகிய வரையறைகளைக் கொண்டதாய் இருந்தது. அவன் தன் புலனனுபவத்திற்கு குறுகிய வரையறைகளைக் கொண்டதாய் இருந்தது. அவன் தன் புலனனுபவத்திற்கு இயைந்த வகையிலேயே உலகு பற்றிய விளக்கத்தைக் கொண்டிருந்தான்.

இயற்கையை அவனால் கட்டுப்படுத்த முடியாதிருந்தது. தனக்குப் புதிராகவிருந்த இயற்கையின் செயற்பாடுகளை ஆளுகை செய்ய விரும்பிய புராதன மனிதன்; தன்னறிவிற்கெட்டிய வகையில் இயற்கை பற்றிய கற்பனையான விளக்கங்களை முன் வைத்து, சமய இலக்கியங்களின் முன்னோடியான ஐதீகங்களை உருவாக்கினான். மந்திரத்தின் மூலம் இயற்கை கடந்த ஆற்றல்களுடன் தொடர்பு கொள்ளலாம் என அவன் நம்பியதுடன் வேட்டையில் மிருகங்களைக் கொல்லவும் மீன் பிடிக்கவும் பகைவருடன் போரிடவும் அவை பயன்படும் எனக் கருதினான். இவைகளனைத்தையும் நாளாந்தம் பிரச்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னைகளைத்தீர்க்கும் உபாயங்களாகக் கருதப் பட்டதுடன், அவற்றிற்கு ஐதீகக் கதைகள் மூலம் சமூக அங்கீகாரமும் பெற்றுக் கொடுக் கப்பட்டன.

ஐதீகங்களில் இரு நிலைப்பட்ட மரபு காணப்படுகிறது. ஒன்று அண்டவியல் பற்றியது. மற்றயது இனக்குழுவின் மரபு வழி பற்றியது. இதுவரை எமக்கு கிடைத்த மிகப் பழைய ஐதீகங்கள் உட்பட பெரும்பாலான வற்றில் இவ்விரு நிலைப்பாடுகளையும் காண லாம். லிங்க புராணத்தில் சூரிய வம்சம், சந்திர வம்சம், யது வம்சம், முதலிய இனக்குழு மரபுகள் பற்றியும்; கூர்ம புராணத்தில் பிருகு, மரீசி மது, புலத்தியர் போன்ற இனக்குழு வம்சங்கள் பற்றியும் விஷ்ணு புராணத்தில் பௌரவர், சந்தது போன்ற இனக்குழு வம் சங்கள் பற்றியும் காணப்படும் குறிப்புக்களை இனக்குழு மரபு வழிக்கு உதாரணமாகத் தர லாம். கூர்ம புராணத்தில் வரும் யுக தருமம் யுக ஒழுங்கு, போன்றவைகளை அண்டவியற் கருத்துக்களிற்கு உதாரணங்களாகக் காட்ட லாம். இவற்றில் கிருதயுகம், திரேதாயுகம் துவாபரயுகம், கலியுகம் போன்ற யுகங்களின் இயல்பும், அவை மாறிமாறி வருதல் பற்றியும் கூறப்படுகிறது. புராணங்களிற் காணப் படும் உலகின் தோற்றம், மாற்றம் பற்றிய கருத்துக்களுக்கு புறம்பாக இயற்கையழிவுகள், குழப்ப நிலைகள் என்பன பற்றியும், இயற்கையின் ஒழுங்கு பற்றியதுமான தகவல் களும் இடம்பெற்றுள்ளன. தீட்டுக்கள் பற்றிய குறிப்புக்களும் முதன் முதலில் ஐதீகங் களிலேயே காணப்படுகின்றன. தீமையும், கொடுமையும் அசுரர்களாகவும் பூதங்களா கவும் கற்பனை செய்யப்பட்டு, புராணங் களில் படைக்கப்பட்ட நாயகர்கள் அவற்றி னையழித்து மனித நலம் பேணுவதாகக் காட் டப்படுகிறது.

ஐதீகங்கள் தனி மனிதருடைய கற்பனை யின் வெளிப்பாடல்ல. குழுமநிலை வெளிப் பாடாகவே அவை காணப்படுகின்றன. ஐதீ கங்கள்; அவற்றின் தொடக்க நிலையில் இனக் குழுவின் தேவைகளை ஒட்டி, அவர் களின் அபிலாஷகளை ஒட்டி, உருவாயின. குழுமநிலை வெளிப்பாடே ஐதீகங்கள் என மனித இனப்பரம்பலியலாளர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். ஐதீகம் வளர்ச்சி பெற்ற நிலையில் சமயத்தைத் தோற்றுவித்தது. ஐதீகப் பிரக்ஞையின் வளர்ச்சி நிலைகளுக்கேற்ப பல வகைத்தான கடவுளர்கள் காலப்போக்கில் தோன்றினர். பிற்காலத்தில் ஐதீகங்கள் சமய உள்ளடக் கத்தைப் பெற்ற பொழுதும், தொடக்கத்தில் சமயத்தன்மையைக் கொண்டவையாகக் காணப்படவில்லை. உதாரணமாக விஷ்ணு புராணத்தின் பல பகுதிகள் சமயத்திற்குரிய னவாகக் காணப்பட்ட பொழுதும் வேறு சில அத்தியாயங்கள் சமய உள்ளடக்கத்தைப் பெற்றிராதவையாகக் காணப்படுகின்றன. சமயம் சார்ந்த உலக நோக்கை உருவாக்கு வதில் ஐதீகங்கள் முக்கிய பங்கை வகித்த தென்பது உண்மையே. எனினும் சமயம் சாராவிடயங்களும் அவற்றிற் காணப்படு வதை மறுப்பதற்கில்லை. □□

எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயமாக்கி மக்கள் போராட்டமாக முழுமைப்படுத்தி, மக்கள் அரங்கிலிருந்து ஒரு பலமான, உறுதிமிக்க தேசிய எதிர்ப் பியக்கத்தை கட்டி எழுப்பும் பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக எழுந்திருக் கிறது. இந்தத் தேவையை பூர்த்தி செய்வதில் எமது கலை இலக்கிய படைப்பாளி களின் பங்கு முக்கியமானது.


தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## நாக சிவசிதம்பரம்

முற்றத்தில் நின்றபடி
முன்னொழுங்கை போய்முடியும்.
பக்கப் பனை வெளியின்
பற்றைகளினூடு - வந்த
ஒற்றைத் திருக்கல் ஒதுங்க
றெயில் போகும்...!

அற்றைத் திங்கள்...
அவ்வெண்ணிலவில்...

சீமெந்து ஆலைச்
சங்கோசை போல் - எனது
சிந்தையினில் இன்றும் - அந்த
றெயில் ஓசை ..!

'கூ' வென்ற ஒலி கேட்டு
குடல் தெறிக்க ஓடி - வந்த
பெட்டிகளை எண்ணி - அதில்
போவோர்க்கும் கைகாட்டி
நின்ற சிறு வயதுகள்... என்
நினைவில்...!

தலையிற் சுமையோடும்
தண்டவாளத்தினில்,
ஏறி நடந்தோடி
எவர் முந்தி? என்ற நாட்கள்...

பாதை நிழல் விரித்துப்
பருத்த மரப் பூவரசின்
வேரடியில் கூடி,
வேகநடை ஓட்டமென்று...
நாடகங்கள் ஆடி நின்ற ..
ஞாபகங்கள் திசைதிசையாய் ..

சொட்டும் பனியில் - உடல்
சோர்ந்திருக்கும் கூதலினில்
உச்சி வெயிலில் - ஒரு
பொழுதறியா உருளுதலில்...
வேர்வை மழையில்...
வெய்யில் குடையாகத் - தன்
ஏலாமை யோடும்
எழுந்தும், விழுந்தும் நொந்தென்
'முதாதை' யுற்ற துயர்
முழுவதுமாய்... மனம் அழுத்தும்...!

இற்றைத்திங்கள்...
இவ்வெண்ணிலவில்...
காணும் பொருளனைத்தும்
கடந்த கதை சொல்லுவதாய்...

தொழில் - தன்சுயம் இழந்த
தொலை பேசிக் கம்பமென...

# வேலியற்ற குடிசை வெளி...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முகம் இருண்டிருக்கின்ற
மின்குமிழின் கூடுகளாய்...
தலை விரி கோலத்;
தாயார் அழும் குரலாய்...

மூடி இடியுண்ட
முற்றப் பதுங்கறையில் - தன்
பிள்ளை மனையாளைப்
பிரிந்தவனின் சோகமென...

தானிருந்த வீட்டில்,
'தவளுகையில்' சூடுபட்ட
சிவனுகள் 'பெட்டி'களாய்...
சிரிப்பும் அடைவுகளாய்...

ஓடும் புகையிரத
ஒழுங்கை வெறும் நிலமாய்...
ஓடி அசையா -
ஓய்வுமிலாப் பெட்டிகளாய்,
இடம் பெயர்ந்து ஒதுங்கிய
ஈரக் குடிசைகள்...!

முட்கிழுவை ஓர - மட்டை
மூரிகளின் பாதை வழி
நுங்குகளைக் கையில்
நிறையப் பொறுக்கி வந்து
ஆச்சியின் கைச் சத்தகத்தால்
அரிந்து குடித்த - அந்த
வேலியற்ற குடிசைவெளி
வேண்டும்...! அவனுக்கு...!



# உன் வெள்ளைப் புறா உருவம் சிறுத்தது ஏன்?

**கனகாம்பிகை கதிர்காமன்**

ஈழத்தமிழன்
இரும்பையொத்தவன்
இது
எல்லோர்க்கும் புரிகிறது
ஏன்
உனக்கு மட்டும் புரியவில்லை?
எங்கள் சமாதானப்புறா
என்றும் சிறுப்பதில்லை
உன் வெள்ளைப்புறா ஏனோ குருவியானது
சடங்கிற்காக புறாவென்கிறாயோ
இல்லை
கணப்பொழுதில் சிறகடித்து
பறந்து விடுவதற்கோ
நாமோ
வெள்ளைக் கொடியைத்தான்
சமாதானக் கொடியென்போம்.
நீ மட்டும்
ஏனிந்தமாற்றம்.
சிகப்புக் கொடியை
சிங்காரமாக ஏற்றி வைத்திருக்கின்றாய்
இரத்தக் கறைகள் இதில்பட்டால்
இனங்காணாமல் இருப்பதற்கோ
இல்லை இல்லை
இராணுவம் ஏற்றியதால்
செந்நிறமோ
எங்கள் கொடியும்
சிகப்புத்தான்.
ஆனால்
சமாதானக்கொடியல்ல
எமது தேசியக் கொடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நினைவிலே பதிதல்



இளையவன்

*விறகையும் சுமக்கும்! விரும்பும் இடமெங்கும் பறந்து செல்லும்! பாதை எதுவானாலும் எரிபொருளும் செலவின்றி ஓடும் வாகனமாம் ஈருருளி என்றே அறி!*

"இதைக் கண்டு பிடிச்சவன் ஆரெண்டு தெரிஞ்சால் அவனுக்கு ஒரு கோயிலே கட்டிக் கும்பிடலாம்."

"இல்லையடா, இதை இங்கை முதலில் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினது ஆரெண்டு தெரிஞ்சாலே அவனுக்கு ஒரு பாராட்டு வைபவமே நடத்தலாம்." யாழ்ப்பாணத்து தெரு ஒன்றில் அருகருகாக போய்க் கொண்டிருந்த இரண்டு சைக்கிற்காரர்களை பார்த்து "தம்பியவை உப்பிடி சமாந்தரமாய் போனால் மற்றவையள் றோட்டில போறயில்லையோ" எனக் கேட்கவேணும் என்ற உந்துதலுடன் சென்ற போது இந்த உரையாடல் செவிகளில் விழுந்தது. இவர்கள் எதைப் பற்றி இவ்வளவு பிரமாதமாகப் பேசுகின்றனர் என்ற எண்ணம் பிறந்தது.

"ஒரு சதமும் செலவில்லாமல் நினைச்ச இடத்துக்கு நம்பிக்கையாய் போச் சேருறதுக்கு இப்ப இதை விட்டால் வேற வாகனம் ஏது" என்ற கேள்வி பிறந்ததும் சைக்கிள் பற்றித்தான் இந்த உரையாடல் நடக்கிறது என்பது புரிந்து போயிற்று.

சைக்கிள் என்ன மாதிரி ஒரு அற்புதமான வாகனம். குடும்ப உறுப்பினர் அனைவரையும் ஒன்றாக சுமந்து செல்லும் சக்தி படைத்தது. நம்பிக்கைக்குரிய வாகனம். வீதியோர அரசமர நிழல் ஒன்றின் கீழ் மோட்டார் சைக்கிளின்பிளக்கை கழற்றி சுத்தம் செய்தபடி "இதை நம்பி வெளிக்கிட்டால் இப்பிடித்தான் அடிக்கடி நிற்க வேண்டியதாய் கிடக்கு" எனப் புறுபுறுத்துக் கொண்டிருந்த ஒருவரின் செய்கை இதை உறுதிப்படுத்தியது. சிற்றூர்தியின் வரவை எதிர் பார்த்துப் பொறுமையிழந்த கைக்குழந்தையுடன் நின்ற இளம்பெண் 'தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சைக்கிள் ஓடக் கற்றுக் கொள்ளவில்லையே' என்று கவலையுடன் வெளியிட்ட பெருமூச்சு சைக்கிளின் மகத்துவத்திற்கு தக்க சான்று. ''ரயரும் வருகுது இல்லை, ரியூப் அடிக்கடி ஒட்டினாலும் காத்துப் போகுது. என்ன அண்ணை செய்யிறது'' என முணு முணுத்தபடி சிற்றூர்தியின் சில்லு ஒன்றைக் கழற்றிய சாரதியின் குரல் சைக்கிளின் சிறப்பை மேலும் எடுத்துக் காட்டியது. எந்த நிலையிலும் தன்னை நம்பிப் பயணம் தொடங்குவோரின் நம்பிக்கையைக் குலைப்பதில்லை என்பதே சைக்கிளின் மிக நல்ல குணமாகும். ஆகக் கூடுதலாக அச்சு உடைந்து போனாலோ அல்லது ரயர் ரியூப் வெடிச்சுப் போனாலோகூட மிகச்சுலபமாக உருட்டிக் கொண்டு போய்விடலாம் தானே.

ஆக இப்படிப்பட்ட சைக்கிளைப் பற்றி இன்றைய நிலையில் ஒருபுராணம் அளவுக்கு சொல்லாமல்விட்டால் நாங்களும் நன்றி மறந்த மனிதர் என்றெல்லே அது நினைக்கும். இன்றைய சூழல் இந்த வாகனத்தின் முக்கியத்துவத்தை வானம் அளவுக்கு உயர்த்தி வைத்திருக்கிறது. கால் இல்லாமற் போனாலும் சீவிக்கலாம், ஆனால் வீட்டுக்கு ஒரு சைக்கிளாவது இல்லாமல் விட்டால் யாழ்ப்பாணத்தில இப்ப சீவிக்க ஏலாது எண்டால் பார்த்துக் கொள்ளுங்கோவன். ஒவ்வொருத்தருக்கும் ஒரு சைக்கிள் இருந்தால் தான் வீட்டில் சர்ச்சை இருக்காது.

அந்த நாளையில, அதாவது இப்ப ஒரு இருபது வருசத்துக்கு முந்தி 764 ம் இலக்கப் பாதையில பதினைந்து நிமிடத்துக்கு ஒன்றும், 750, 751 இலக்கப் பாதைகளில ஐந்து நிமிடத்துக்கு ஒன்றுமாக இ. போ. ச ஓடிக்கொண்டிருந்த காலத்தில சைக்கிள் அத்தியாவசியமில்லாத ஆடம்பரப் பொருள் போலதான் அநேகமானோருக்கு இருந்தது. சும்மா ஊருக்குள்ள சுத்தித்திரியிறதுக்கும், சந்தைக்கும் - கடைக்குப் போய் வரவும் தான் இது பெரும்பாலும் பயன்பட்டது உண்மையே. இன்னும் விடலைப் பையன்களின் வாலிப சேட்டைகளுக்கு உரிய வாகனமாகவும், மைனர்களாயிருக்கும் 'டீன்ஏஜ்'காரர்கள் தம் சாகஸங்களை புலப்படுத்தும் இனமாகவும் இது இருந்ததும் உண்மைதான். ஐந்து நிமிசத்துக்கு ஒன்றாக ஓடிய இ. போ. சவில் இடம் பிடிக்க ஒரு மணி நேரத்துக்கும் மேலாக காவல் நின்று அலுத்துச் சலித்துப் போனாலும் சைக்கிளை எடுத்துக்கொண்டு தூரப் பயணம் போக அநேகமாக ஒருத்தருக்கும் மனம் வாறதில்லை அப்ப. யாழ்ப்பாணத்தில இருந்து பருத்தித்துறைக்கு சைக்கிளில போறது எண்டால் ஏதோ பெரிய சாதனை மாதிரிக் கருதுவோர் ஒருபுறமும், 'பஸ்சுக்கு காசில்லையாக்கும், அதுதான் இவர் சைக்கிளில வந்தவராக்கும்' என்ற ஏளனப் பார்வை மறுபுறமும் கட்டாயம் சூழ்ந்து இருக்கும். ஆனால் இப்பவெல்லாம் அப்படியில்ல. இதெல்லாம் சர்வசாதாரணம். பருத்தித்துறையிலிருந்து காலைத் தேநீருடன் புறப்பட்டு மதியச் சாப்பாட்டிற்கு வட்டுக் கோட்டைக்கு போய், பிற்பகல் தேநீர் யாழ்ப்பாணத்தில குடித்துவிட்டு, கொடிகாமத்தில் மாலை நேரச் சந்திப்பை முடித்துக் கொண்டு இரவுக்கு மீண்டும் பருத்தித்துறைக்கு போய் சேர்ந்து விடுவது இப்ப அப்படி ஒன்றும் பெரிய விடயமாக இல்லை. அது மட்டுமல்ல சைக்கிள் ஒன்று இல்லாவிட்டால் இப்படி செய்வது சாத்தியமாகப் போவதும் இல்லை.

இன்னும் பாருங்கோ. இப்ப சைக்கிளில போறதைக் கௌரவக் குறைச்சலா ஒருத்தரும் பார்க்கிறதில்ல. பல்கலைக்கழக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துணை வேந்தர் முதல் மாவட்ட அரசாங்க அதிபர் வரையிலும், வைத்திய கலாநிதிகள் முதல் சிற்றூழியர் வரை அனைவருக்கும் கைகொடுக்கும் ஒரே வாகனம் சைக்கிள்தான். இந்தியன் ஆமி இருந்த காலத்தில துவக்கையும் தூக்கிக்கொண்டு சைக்கிளில ஓட என்ன மாதிரிக் கஷ்டப்பட்டனம். இப்ப பாருங்கோ எங்கட போராளியள் எவ்வளவு லாவகமாய் துவக்குகளோடை சைக்கிளில இப்படியும் அப்படியுமாய் போய் வருகினம். இன்னும் எந்தத் தரத்தில் என்ன தொழிலைச் செய்தாலும் சைக்கிள் தவிர்க்க முடியாதபடி அத்தியாவசியமான வாகனமாக இருக்கிறது. விறகுவெட்டி விற்போர் முதல் பலருக்கு சைக்கிள் ஒரு மூலதனம்.

வீசும் காற்றை எதிர்த்து சைக்கிளை உதைக்கும் ஒவ்வொருவரும் போக்குவரத்து பிரச்சனையை எதிர்த்து சமாளிப்பதில் வெற்றிகொள்கின்றனர். சுமார் அறுபது முதல் எண்பது கிலோ வரையிலான விறகை வெட்டி சைக்கிளில் கட்டிக்கொண்டு நாவற்குழி பாலத்தில் காற்றை எதிர்த்து சைக்கிளை மிதிக்கும் சிவலிங்கம் இரண்டாம் ஈழப்போர் தொடங்கும் வரையில் ஒரு கட்டிடத் தொழிலாளி. சீமெந்து தொழிற்சாலை இராணுவ ஆக்கிரமிப்பினுள் போக - தடைவிதிக்கப்பட்ட பொருட்களின் பட்டியலில் சீமெந்தும் இடம்பிடித்துவிட்டது. தினசரி கட்டிடங்கள் இடிபடும் போதும், மீளக்கட்டுவோரின்றிப் போனதால் அவன் இப்போது ஒரு விறகு வெட்டி. ஆனையிறவின் உப்பளத்தில் வேலை பார்த்து வாழ்க்கையை ஓட்டிய வசந்தகுமாரனின் வாழ்வின் வசந்தம் சிறீலங்கா அரசால் பறிக்கப்பட்டுவிட அவன் இப்போது சிறுவியாபாரி. பளை, கொடிகாமம் பகுதியில் தேங்காய், பொச்சுமட்டை கொள்வனவு செய்து சங்கானை, சண்டிலிப்பாய் பக்கம் கொண்டு போய் விற்பனை செய்வது அவன் தொழில். இந்தத் தூரத்தைக் கடக்க சைக்கிள் அவனுக்கு பிரதான கருவி. உடல் உழைப்பால் சிறீலங்கா அரசை எதிர்த்து சவால்விட்டு வாழ்க்கையை ஓட்டும் தன்னம்பிக்கையின் சின்னமாக அவர்கள். இங்கே இருப்பது இனப்பிரச்சனையா இல்லையா என்பது பற்றி எந்தப் பட்டிமண்டபமும் நடத்திக் கொண்டிருக்காமல் யுத்தத்தின் சத்தங்களை ஆமோதிக்கும் துணிவுக்கு எடுத்துக் காட்டு. முயற்சியும் நம்பிக்கையும் இருக்கும் வரையில் இந்தப் போரில் வெற்றி எங்கள் பக்கமே என முரசறையும் வாழ்வின் பிரதிபலிப்புகள் அவர்கள். என்றோ ஒரு நாளில் இப்போர் வெல்லப்படும் - இடிந்த கட்டிடங்கள் மீள கட்டி எழுப்பப்படும். ஆனையிறவு உப்பளத்தின் விளைச்சல், எங்களுக்கு உரியதாகும். கீரிமலைக் கேணியில் நீராடி மாவைக் கந்தனை மனம் மகிழக் கும்பிடும் காலம் வரும். மறந்து போயிருக்கும் பாலைதீவு - கச்சதீவு பயணங்கள் மீண்டும் நடக்கும். அப்போது எங்கள் எதிர்காலமும் ஒளிமயமாகும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அவர்கள்.

எட! சைக்கிள் பற்றி சொல்ல வெளிக்கிட்ட நான் அதை விட்டிட்டு எங்கேயோ போயிட்டன் எண்டே நினைக்கிறியள். அப்பிடியில்லை. சைக்கிளோட்டியைப் பற்றியும் சொல்லத்தானே வேணும். அது போகட்டும். இப்ப ஒரு இருபது முப்பது வருசத்துக்கு முந்தி எங்கட தாத்தா நூற்றிநாற்பது ரூபாவுக்கு வாங்கின றலி சைக்கிள் இன்னும் வீட்டில நிற்குது. நேற்றோ முந்த நாளோ வீட்டை வந்த ஒருத்தர் இப்ப விற்கிற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெண்டால் சொல்லும் இருபதாயிரம்ரூபா தாறன் எண்டார். மஞ்சள் லையினிங் இன்னும் அழியாத கறுப்பு பெயின்ற் - மில்லர் டைனமோ கெற்றும் பூட்டி வீநைண்டி சீற் போட்ட அந்தச் சைக்கிளுக்கு இப்பவும் அப்படி ஒரு மவுசு. அந்த நாளையில பதினாறு பவுணுக்கு வாங்கினது. இப்ப பதினாறுபவுண் என்ன விலை. அவ்வளவு தாறதெண்டால் விற்கிறதைப் பற்றி யோசிக்கலாம் என்று இறுமாப்புடன் சொல்லி அவரை அனுப்பியாச்சு. முன் மட்காட்டில பூட்டியிருந்த வெள்ளிக் குதிரையை மாமா இதென்னத்துக்கு விளக்குமாத்துக்கு குஞ்சம் கட்டின மாதிரி எண்டு சொல்லிக் கழட்டி எறிஞ்சு போட்டார். அதையும் எடுத்துப் பூட்டி வைக்க வேணும் எண்டு தேடிக் கொண்டிருக்கிறன். இப்ப எத்தனை விதமான சைக்கிள்கள் வந்திட்டுது.

ஏசியா பைக், பிளயிங் பிக்கஸ, ஹீரோ, ஈஸ்டன் அது இது எண்டு எண்டாலும் அந்தக் காலத்து றலிக்கும் றட்ஜுக்கும் இன்னும் மதிப்பு குறையேல்லை. சைக்கிள் போக்குவரத்து வாகனம் மட்டுமல்ல. டைனமோவை சுற்றி றேடியோ கேக்கிறதுக்கும் அதுதான். முந்தி கறண்ட் வரமுன்னமும் றேடியோ கேட்டது தான். ஆனா அப்ப பற்றி இருந்தது. இப்ப பற்றி வரவிடமாட்டன் எண்டு அரசாங்கம் சொன்னாப் பிறகு தானே டைனமோவைச் சுத்தி றேடியோ கேக்க பழகின நாங்கள். இப்ப றேடியோவும்கேக்கவேணும். இல்லாட்டால் ஊரடங்கு எப்ப போடுகினம் எண்டு என்னெண்டு தெரியும். ஊரடங்கு போட்டால் என்ன எப்பவும் ஒரு மாதிரி தானே. இந்த டைனமோவைச் சுத்தி றேடியோ கேட்க ''எடேய்..... நீ என்னத்தை தடை விதிச்சால் என்ன அதுக்குள்ளயும் எங்களால வாழமுடியுமடா'' எண்டு அது சொல்லுறது மாதிரி தான் எனக்குள்ள ஒரு நினைவு.

மரங்களில கடைச்சல் வேலை செய்யிற ஒரு பட்டறை. படிப்படியாய் உழைச்சு கையால செய்த கடைச்சல் வேலைகளுக்கு ஒரு மோட்டரை எடுத்துப் பொருத்தியிருந்தவர் சிங்கார வேலர். அச்சு இயந்திரத்தை மூலதனமாக்கி தொழில் நடத்தி வந்த மரியதாஸ். கறண்ட் இல்லை எண்டு இவை சோர்ந்து போகயில்ல. பழைய - பார் உடைந்து போன சைக்கிள்களைப் பயன்படுத்தி தமது தொழிலை நடத்த இவர்கள் கற்றுக்கொண்டு விட்டனர் எண்டால் சைக்கிளை ''செத்தும் கொடுத்தான் சீதக்காதி'' எண்டது போல புகழாமல் இருக்க முடியுமோ?

இப்பிடி சைக்கிள் எங்களுக்கு உதவுது எண்டு தெரிஞ்சு தானாக்கும், போல்ஸ் தொடக்கம்எல்லா பாட்சும் கொண்டு வர விடாமை தாண்டிக்குளத்தில மறிக்கினம். இவை இப்பிடி மறிச்சாப் போல என்ன சாமான்கள் வராமலே கிடக்கு. மறிக்கிறவை தான் வேறவேலையில்லாமை ஒவ்வொண்டாய் கிளறிக் கொண்டு நிக்கினம் அது போகட்டுக்கும்.

கிறீச் கிறீச் எண்ட சத்தத்தோட ஒரு பழம் சைக்கிளில நஷனல் சேட்டுப் போட்ட ஒருத்தர் ஒரு மனுசியையும் ஏத்திக் கொண்டு என்னை விலத்திப் போறார். இந்த வயதான காலத்திலயும் இந்தாள் என்னை முந்திக் கொண்டு போகுதே எண்டு ஒரு நினைப்பு வர இறுக்கி மிதிக்கிறன். ''இன்னும் ஒரு சொட்டு நேரத்தில வைத்தியரிட்டைப் போயிடலாம்'' என்ற குரல் அவரது அவசரத்தை உணர்த்த திரும்பிப்பார்க்கிறன். ''இந்தச் சைக்கிள் இல்லாட்டி இப்ப எவ்வளவு கஷ்டம்''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்றேன் ஒருவித ஆவேசத்துடன் ஒருவித முறைப்புடன் என்னைப் பார்த்தார் அவர். ''தமிழ் என்ன மாதிரிக் கெட்டுப் போச்சு. தான் பேசுற மொழி என்ன எண்டே தெரியாமல் தமிழன் தடுமாறுறான்'' என்றார் அவர் கோபத்துடன்.

'என்ன ஐயா?' என்றேன் பவ்வியமாக.

''சைக்கில் தமிழ்ச் சொல் இல்லை''

''அப்ப துவிச்சக்கர வண்டி எண்டு சொல்லலாமோ''

''அதுவும் தமிழ்ச் சொல் இல்லை. துவி, சக்கரம் எல்லாம் சமஸ்கிருத சொற்கள்''

''ஓ அப்பிடியோ...... அப்ப சைக்கிளுக்கு தமிழ் என்ன ஐயா''

''ஈருருளி'' என்றார் அவர்.

இதே மாதிரி எந்த எரிபொருட் செலவும் இல்லாமல் மனித சக்தியில் மட்டும் இயங்கக் கூடிய தான பறக்கும் வாகனம் ஒன்றும் ஆராவது கண்டு பிடித்தால் எப்படியிருக்கும்? □□




**இளந்திரையன்**

## சிறகுகளுக்காய்

தொலைவிருந்து
தென்றலில் மிதந்து வந்தென்
காதிற் புகும்
நாதஸ்வர ஓசையின் இனிமையாக,
யுத்தத்தின் சத்தங்களை
நான் ஏற்றுக் கொள்கிறேன் !

இடிபாடுகளின் நடுவே நம்பிக்கையுடன்
எதையோ தேடிக் கொண்டிருப்பவனாய்
இன்னும் என்னை நினைத்திருக்கும்
காதலியின் மேலான அன்பை விட,
வெறுமை சுமக்கும்
என் தாயகத்தின் வாழ்தலுக்காய்
துன்பங்களை ஏற்றுக் கொள்கிறேன் !

தேனாய் இருந்து
ஈயாக என்னை ஒட்டிவிடப் பார்க்கின்ற
உறவுகளை விட்டு உயரப் பறக்கின்றேன்!

மரதனோட்டக் களைப்பினூடும்
கலைகளைப் படைக்கிறேன்.
மூக்கு முட்டும்
பிரபஞ்சப் புதுமை போன்ற
அனுபங்களினூடும்

என் கருப்பையிலிருந்து பிறப்பெடுக்கும்
இலக்கினை நோக்கிய இலக்கியக் குரல்,
இதயம் பிரசவிக்கும்
சிவப்பு வியர்வையும்,
சிறகுகள் வாங்க !...... □□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நேர்காணல்

## தமிழ் அபிமானியும் எழுத்தாளருமான திரு. நாக. பத்மநாதனுடன் நேர்முகம்

□

கருணாகரன்



தள்ளாத வயதிலும் தளராத தமிழ்ப்பணி

□□ உங்களின் இளமைப்பராயம், படிப்பு வேலை, குடும்பம் உள்ளடங்கியன பற்றிக் கூறுங்கள்:

□□ யாழ்ப்பாண நகரத்தில் 1925 ஆம் ஆண்டு பிறந்தேன். யாழ். பஸ்நிலையம் (பழைய பஸ் நிலையம்) அமைந்திருந்த இடம் அன்று 1930ஆம் ஆண்டளவில் மேய்ச்சல் தரையாகவே இருந்தது. நடுவிலே ஒரு மீன் விற்பனையாகும் 'கொட்டில்' இருக்கும். அவ்வளவுதான். இன்றைய மணிக்கூட்டு வீதி, இரண்டு துண்டாக்கப்படுமுன் அது ஒரே நீளத்துக்கு இருந்தது. இப்போது வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவுடன் இணைந்த பெரும் பகுதி, முன்னர் மரவள்ளித் தோட்டமாக இருந்தது. அப்பால் மணிக்கூட்டுக் கோபுரம், சம்புக்குளத்திற்கு எதிரே பல விரிந்த மைதானங்கள், இந்த இயற்கைச் சூழலில் நான் பிறந்து பயின்று வளர்ந்தேன். யாழ். மத்திய கல்லூரியில் படித்தேன். நாங்கள் அன்று படித்தது ஆங்கில மொழிமூலமே. அப்பொழுது தமிழ் ஒரு பாடம் என்ற வகையில்தான் இருந்தது. எங்கள் கல்லூரியின் அதிபர் ஆங்கிலேயராகவே இருந்தார்.

அன்று தமிழாசிரியர்களுக்கு மதிப்புக் குறைவாகவே இருந்தது. அவ்வளவுக்கு ஆங்கிலமயமும், ஆங்கில மோகமும் பரவியிருந்தது. எனினும் நான் கல்லூரியின் தமிழ்ப் பண்டிதர் திரு. சர்மா அவர்களின் அன்புக்கு உரியவனாகவே இருக்கக் கிடைத்தது.

எங்களது குடும்பச் சூழல் நிதி வீழ்ச்சிக்கு உள்ளாகியதால் பள்ளிக்கூடக் கட்டணம் செலுத்தமுடியாது பலதடவைகள் நான் பாடசாலையில் இருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றேன்.

நிறைந்த துன்பங்களின் இடையே தந்தையுடன் எனது தாய் - செல்லாச்சி - எங்களை வளர்த்தார். என்னால் தொடர்ந்து உயர்படிப்பைப் படிக்க முடியவில்லை. சீதனப் பிரச்சனை காரணமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனது சகோதரியின் திருமணம் கைகூடாதிருந்த துயரமும் எமக்கிருந்தது.

இவ்வளவினூடும் எனது தந்தையார் நாகமுத்து கந்தையா நிறைய வாசிப்பதில் விருப்புடையவராக இருந்தார். ஒரு பெட்டகத்தில் நிறையத் தமிழ்ப் புத்தகங்களை வைத்திருந்தார். இவை இளவயதில் என்னில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தின. சிறுவயதில் கூத்துக்களைப் பார்க்கும் ஆர்வமும் இருந்தது.

இதன் பிறகு இரண்டாம் உலகப்போர் காலத்தில் ''பொதுமக்கள் பாதுகாப்பு'' (ஏ. ஆர். பி) பிரிவில் வேலை தேடிக்கொண்டேன். வேலை செய்தபடியே மேற்கொண்டு படித்தேன். பிறகு யாழ்ப்பாணத்தில் கடற்றொழில் இலாகாவில் தற்காலிக வேலை கிடைத்தது. இந்த வேலையின் நிமித்தமாக மயிலிட்டி, ஊறணி, செம்பியன்பற்று, தாளையடி என்ற கடலோர கிராமங்களுக்குச் சென்று வாடி அமைத்து இருந்திருக்கிறேன். இவ்விதம் இந்த மக்களுடன் சேர்ந்து வாழக்கிடைத்ததுண்டு. பின்னர் நிரந்தர எழுதுவினைஞர் சேவையில் சித்தியடைந்து கொழும்புக்குச் செல்லவேண்டியாயிற்று.

அக்காலத்தில் யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தின் மிகுந்த மதிப்புடன் நோக்கப்பட்ட வேலை 'கிளறிக்கல்' என்பதுதான்!

1947 ஆம் ஆண்டில் கொழும்பில் வேலை செய்யத்தொடங்கினேன். 1953 ஆம் ஆண்டு தாய் போலிருந்த, என் தமக்கையார் பேசிச்செய்த திருமணம் நடந்தது.

பெண் பார்க்கப் போகும்பொழுதே என் மனதில் ஒரு தீர்மானம் இருந்தது. அது, பார்க்கச் செல்லும் அப்பெண்ணையே திருமணம் செய்வது என்பது. இவ்வகையில் அமைந்த எனது வாழ்க்கைத்துணைவி பரமேஸ்வரி, நான் பின்னர் ஏற்று வாழ்ந்த போராட்ட வாழ்க்கையிலும் - மனம் கோணாத துணையாகி - சமபங்காளியாகி இந்நாளளவும் வாழ்ந்து வருவது மனதிலோர் அமைதியைத் தருகிறது. இந்த வாழ்க்கைத் துணையைத்தந்த புங்குடுதீவு எனக்கு தமிழ் உணர்வையும் தரத்தவறவில்லை. குழந்தைகள் நால்வர் வளர்ந்தனர்.

இதனிடையே, 1956 ஆம் ஆண்டு சிங்கள மொழிச் சட்டமும் அரசியற் திணிப்புக்களும் வந்தபோது எனது மன உணர்வும் திசையும் வேறு திருப்பங்களுக்கு உள்ளாயின.

●● *கூத்துக்களில் உங்களின் ரசனை, ஈடுபாடு எவ்வாறிருந்தது?*

□□ இன்றும் நன்றாக நினைவிலிருப்பது நான் சிறுவயதில், இருந்த போது அன்றைய பரந்த 'வயிரவர் கோவில் வளவில்' நடாத்தப்பட்ட கோவலன் கூத்துத்தான். நான் ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாணம் கடற்றொழில் இலாகாவில் வேலையாயிருந்தபோது தாளையடி, செம்பியன்பற்று பகுதிகளில் ஆடப்பட்ட கூத்துக்களின் பல கட்டங்களும் கண்முன் நிற்கின்றன.

இதற்கு முன், இன்றைய 'வின்ஸர் படமாளிகை' அன்று 'கூத்துக்கொட்டகை' என்ற பெயருடன் இருந்தது. இந்தியாவிலிருந்து பல கலைஞர்கள் இங்கு வந்து கூத்துக்களை நிகழ்த்துவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் துரதிஷ்டவசமாக காசு கொடுத்து அந்தக் கூத்துக்களைப் பார்க்க முடியாதபடி வீட்டு நிலைமை இருந்தது. விளம்பரங்களை மட்டும் பார்த்து ஆவலுறுவதுதான் அன்றைய அனுபவம்.

**உங்கள் அரசியல் உணர்வு, செயற்பாடுகள் எவ்விதமாய் இருந்தன?**

சாதாரண வேலை செய்துகொண்டிருந்த காலத்தில் 1956 இல் பண்டாரநாயக்க கொண்டுவந்த தனிச் சிங்களம் மட்டும் சட்டம் சிங்கள மொழித் திணிப்பாகவே இருந்தது. இதைத் தொடர்ந்து எழுந்த அரச நடவடிக்கைகளும் தமிழின ஒடுக்கு முறையின் வடிவங்களாகவே இருந்தன. இவைதந்த நன்மை, எம்மொழி உணர்வையும், இன உணர்வையும், கூட்டியதே! இந்நிலையில் தமிழ் அரசாங்கஊழியர் சங்கத்தை ஆக்கினோம். இதன்தலைவராக இருந்தவர் வவுனியாவின் பாலமோட்டை, நவ்வியில் பின்னர் வதித்த திரு. பாலசிங்கம் அவர்கள். நானும் செயற்குழு உறுப்பினராக இருந்தேன். இதிலிருந்து உதித்ததே தமிழ் எழுதுவினைஞர் சங்கமாகும். இச்சங்கம் அரசாங்க சிங்கள மொழித்திணிப்புக்கு எதிராக அன்று பிரபல்யம்பெற்ற 'கோடீஸ்வரன்வழக்கை' தொடக்கி நடாத்தி வெற்றியும் கண்டது. ஆனால் அதனை ஏற்று நடைமுறைப்படுத்த மறுத்த அரசாங்கம் அதனைப் புதைகுழியிடத் தயங்கவில்லை.

1961 இல் நான் மன்னாரில் வேலைசெய்தேன். அங்கு சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது அதில் தீவிர பங்கெடுக்க முடிந்தது. இந்த அரசியல் அலைகளை அடக்கிப் பழிவாங்க, அரசாங்கம் அங்குள்ள கிராம மக்களை 'கள்ளத்தோணி' என்ற பெயரில் இரவு நேரத்தில் பிடித்துத் துன்புறுத்தும் வழி முறைகளைக் கையாண்டது.

*அடக்கமாக இருந்து சீரிய தமிழ்ப்பணி புரிவதில் முதன்மையானவர் நாக. பத்மநாதன் அவர்கள். தமிழ் மொழிப்பற்றுக் காரணமாகவே அரச பதவியை உதறித்தள்ளிவிட்டு, தமிழ் மொழிக்காக தமிழ் இனத்திற்காக வாழ்பவர். உருவகக் கதைகள், நீதிக்கதைகள், விளக்கக் கட்டுரைகள் எனப் பலவிதமான இலக்கியம் படைப்பதில் மிகத் திறமையானவர். சலசலப்பு இல்லாமல் செயலாற்றும் இவரின் செயற்பாடுகள் பல*

-ஈழ முரசு இலக்கியச் சாளரம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதற்கு இராணுவமும், பொலிசும் பயன்படுத்தப்பட்டனர். அப்போது நான் கச்சேரியில் நிர்வாகப் பகுதியில் பொறுப்பாக இருந்தேன்.
மக்களின் முறைப்பாடுகள் வந்தன. மன்னார், அடம்பன் பகுதியிலிருந்து ஒரு தாய் வந்திருந்தாள். தனது மூன்று பெண்பிள்ளைகளையும் கூட்டி வந்திருந்தாள். விசாரணையின்போது என்மீது நம்பிக்கை வைத்திருந்த அவள், தனது ஒரு மகளின் கழுத்தின் கீழ் ஏற்பட்டிருந்த காயத்தைக் காட்டினாள். நினைக்க இன்றும் நெஞ்சம் கொதிக்கின்றது. அது ஒரு இராணுவ நாய் ஏற்படுத்திய நகக்கீறு எனச் சொன்னார்கள்.
அவ்வேளைய என் நெஞ்சத்தில் ஒரு தீர்மானம் எழுந்தது. இந்த அரசாங்கத்தின் கீழ் நான் தொடர்ந்து வேலை செய்யக்கூடாது என.
1963 முற்பகுதியில், எனது 37வது வயதில் இந்த ஆசை நிறைவேறியது. வேலையை விட்டு விலகினேன்.
தொடர்ந்து அரசியலில், அதாவது விடுதலைப் போராட்ட அரசியலில், ஈடுபட்டபடி ஒரு பின்னணித் தொண்டனாகவே என்னை அமைத்து இயங்கினேன். இருந்தும் தமிழரசுக் கட்சியின் 2 வது திருமலை மாநாட்டில் கட்சியின் உதவிச் செயலாளரில் ஒருவனாக்கப்பட்டேன். தந்தை செல்வாவுடனிருந்த தொடர்பு மேலும் நெருங்கியதாயிற்று.
அன்றைய வாலிப முன்னணித்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்பும் கிடைத்தது.
அவ்வேளையில் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட சிங்கள 'ஸ்ரீ' பஸ்களுக்கு யாழ்ப்பாணத்திலும் முறிகண்டியிலும் வைத்து 'டைனமைற்' வைத்தமை என் மனதிற் பதிந்த நினைவுகளில் ஒன்று.
துரோகி துரையப்பாவின் காருக்கு சிவகுமாரன் குண்டு வைத்தது இன்னொரு நிகழ்வு. எனினும் கூடுதலாக இடம்பெற்ற ''தேர்தல் அரசியல்'' என் போன்ற தொண்டர்களை சஞ்சலத்திற்கு உள்ளாக்கியதும் உண்மை.
விடுதலைக்குரிய எழுத்துக்கள் எனக்கு ஆறுதல் தந்தன. 'வீணாக வேலையைவிட்ட ஆள்' என என்னைச் சிலர் இகழ்ந்ததும் உண்டு!
'குடாநாட்டை விட்டு வெளியேறுவோம்' 'வன்னியில் கமம் செய்வோம்!' என ஓமந்தை பாலமோட்டைப் பகுதியிலிருந்த பாலசிங்கம் ஐயாவின் குரல் என்னை ஈர்த்தது. அவருடன் சேர்ந்து வாழ்ந்தேன். பயின்றேன்.
பின்னர் மன்னார் மாவட்ட கட்சி அமைப்பு வேலையிலும் செயற்பட்டேன். மன்னாரும் யான் விரும்பும் மாவட்டமாயிற்று.
இவை பல வருடத்திற்கு முன்னைய நினைவுகள். என் வாழ்வின் சில பகுதிகள்.

●● தந்தை செல்வாவுடனான உங்களது ஈடுபாடு அல்லது உறவு எவ்விதம் இருந்தது?

□□ ஆரம்ப, மானசீகமான அரசியல் குருவாக அவரே இருந்தார்.
மொழிப் போராட்டமானது இன உரிமைப் போராட்டத்தில் ஒரு முக்கிய அங்கமே. அரசாங்க ஊழியனாயிருந்த எனக்கு இந்த மொழிப் போராட்டமூலம் தந்தையின் தொடர்பு முதலில் கிடைத்தது.
பின்னர் 1963 ஆம் ஆண்டு தந்தையின் நேரடித் தொடர்பு எனக்கு இன்னும் நெருக்கமாய்க் கிடைத்தது.
தமிழரசுக் கட்சியின் உதவிச் செயலாளனாகவும், 'விடுதலைப் பரணி, ஏட்டின் பொறுப்பாசிரியனாகவும் இருக்கக் கிடைத்தது. அவசரகாரணம் கொண்டு என்னைக் கொழும்புக்கு அழைத்து 'சுதந்திரன்' பொறுப்பிலும்



புலி வீரனுக்கு கீதை உரைக்கும் கண்ணனாக பெரியவர்

தந்தை என்னை அமர்த்தியதுண்டு.
அவ்வேளை ஆசிரியர் கோவை-மகேசன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோருடன் ஒன்றாக வாழ்ந்ததுண்டு.
உண்மை, நேர்மை என்பவற்றில் தந்தையவர்கள் ஒரு மாமலையே.

●● நீங்கள் விடுதலைப் புலிகளுடன் உறவாடத் தொடங்கிய பின் உங்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*மன உணர்வுகளும், உங்களில் தெரியும் உத்வேகமும் பொலிவும் வித்தியாசமாக இருக்கின்றன. இது எதன் நிமித்தம்?*

☐☐ முதலில் நான் ஏன் விடுதலைப் புலிகளுடன் உறவாகினேன் என்பதை விளக்குதல் கடமை. 1960க்கு முன் தமிழரசுக் கட்சியினராகிய நாங்களே மொழி, மண், எம் இனம் என விடுதலைப் போராட்டத்தைத் தொடக்கி வைத்தோம். இடையில் இது தளர்ச்சியுற்றது. அன்று நாங்கள் சொல்லியதை இன்று - ஆயிரம் மடங்கு இடர்களின் நடுவே- விடுதலைப் புலிகளே செய்து வருகிறார்கள். வியத்தகு அர்ப்பணிப்பு நடைபெறுகின்றது. அன்று சொல்லியும் தொடக்கியும் விட்ட நாங்கள் இன்று தூரத்தே இருக்கமுடியாது. இந்த வகையிலேதான் நான் விடுதலைப் புலிகளுடன் உறவாடத் தொடங்கியுள்ளேன். இன்னொன்றையும் கூறவேண்டும். எங்களை நாங்கள் என்றும் காக்க, வல்ல, உரிய வழி இதுதான் என்பதே உண்மை. எதிரியின் ஆக்கிரமிப்பைத் தடுத்தற்கு வழி, எம் எதிர்ப் போராட்டமே. அடிவிழும்போதுதான் அவன் விலகுகிறான். சூடுபடும் போதுதான் அவன் ஓடுகிறான். அன்று செல்வந்தர்கள், செல்வாக்கில் செழித்தவர்கள்தான் 'அரசியல்' நடத்தினார்கள். அது நேர்தல் அரசியல். இதை நான் நேரிற் கண்டிருக்கிறேன். இன்று 'சுடச்சுடரும் பொன் போல' இளம் போராளிகள் நிற்கிறார்கள். வீட்டுச் சுகங்களையும் சொகுசுகளையும் துறந்து வந்துள்ளார்கள். கடின வாழ்க்கையை தேர்ந்து, அதனை ஏற்று வந்துள்ளார்கள். தமிழினம், எம் தாய் நாடாகிய தமிழீழம் என்பதன் விடிவுக்காக வந்திருக்கிறார்கள். இன்னொரு புறம் சாதியம் தகர்க்கப்படுகிறது. பெண்ணினம் புது ஒளியும் வீறும் கொள்கிறது. இந்தப் புது யுகத்தைக்காண்பது எனக்குப் பூரிப்புத் தருகிறது. முன்பு பெரும் புரட்சித் தலைவர்களின் வடிவத்தை ரஷ்யநாட்டு லெனினிலும் கியூபாவின் பிடல் காஸ்ரோவிலும் சீனத்தின் மா - சே - துங்கிலும் பார்த்தோம். இன்று, நாம் வியந்த நாடுகள், எம்மை வியக்கும் அளவுக்கு எம் தலைவர் பிரபாகரனின் ஆளுமை உயர்ந்து நிற்பதால்

*அன்று நாங்கள் சொல்லியதை இன்று - ஆயிரம் மடங்கு இடர் நடுவே - விடுதலைப் புலிகளே செய்து வருகிறார்கள். வியத்தகு அர்ப்பணிப்பு நடைபெறுகின்றது. அன்று சொல்லியும் தொடக்கியும் விட்ட நாங்கள் இன்று தூரத்தே இருக்கமுடியாது. இந்த வகையிலேதான் நான் விடுதலைப் புலிகளுடன் உறவாடத் தொடங்கினேன்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாமும் உயருகிறோம்.
பலம் கொள்கிறோம்.

●● இலக்கியத் துறையில் உங்களது ஈடுபாடு, செயற்பாடு பற்றிச் சொல்லுங்கள். நீங்கள் எழுதிய படைப்புக்கள் நூலகள் எவை?

□□ சிறுவயதில் வாசிக்கக் கிடைத்த வாய்ப்பும், தந்தையார் சேகரித்து வைத்த நூல்களும் எனக்கு உதவின. 1950 ஆம் ஆண்டு எனது முதற் கட்டுரை வந்தபோது தந்தையார் அதை வாஙகிப் படித்ததும் கண்ணீர்விடத்தொடங்கிவிட்டார். மிகவும் நலிந்து போயிருந்த தந்தையார் 'இவ்வளவும் போதும்' என்று தழுதழுத்த குரலில் மகிழ்வுடன் கூறிய வார்த்தைகள் இன்றும் என் நெஞ்சிலிருக்கின்றன.

ஆரம்பத்தில் இரவீந்திரனாத்தாகூர், காண்டேகர் ஆகியோரின் எழுத்துக்கள் என் கற்பனையை வளர்த்தன. ஆத்மாவைத் தொட்டன. பழந்தமிழ் நூல்களையும் படிக்கக் கிடைத்தது. பாரதியார், பாரதிதாசன், கல்கி ஆசிரியர், அறிஞர் அண்ணாவும் அள்ளி வழங்கினார். என் அன்பின் நண்பர் கவிஞர் கரவைகிழாரின் ஊடாக தமிழறிஞர் கந்தமுருகேசனாரின் யாப்பிலக்கண படிப்பும் கிடைத்தது. யாப்பிலக்கணம் நல்ல வசன நடையை எனக்கு தந்துதவுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக எனக்கு துணையாக நிற்பது திருக்குறளே. பல வெளியீடுகளுக்கும் யான் எழுதியதுண்டு. நூல்கள் என 'பொதுப்பணி' எனும் கைநூலும், 'வள்ளுவ வழியில் வீரம்-மானம்' எனும் நூலும் 'அதிர்ச்சி நோய் எமக்கல்ல' எனும் உருவகத் தொகுப்புமேயாகும். இதில் 1950 லிருந்து 1993 வரை எழுதப்பட்ட உருவகக் கதைகள் உள்ளன.

நான் எழுதியதை ஒருவர், இது கவித்துவமாக இருக்கிறது எனும் போது நான் மகிழ்கிறேன்.

●● உருவகக் கதைகளில் மிக கவனிக்கப்படவேண்டிய அம்சங்கள் எவையென நினைக்கின்றீர்கள்?

□□ மனிதர்களாகிய எமக்கு மட்டும்தான் மொழியும் உணர்வும் உள்ளதென நாங்கள் நினைக்கிறோம். ஆனால் எல்லாவற்றிலும் மொழியும் அழகும் உணர்வும் உள்ளன. குருவிக்குக் குரல் உள்ளதைப் போல கல்லுக்கும் சொல்லக் கதையுண்டு! இவற்றில் நெஞ்சத்தைப் பறிகொடுத்தால்தான் உருவகத்தை எழுதக் கிடைக்கும்.

சில கற்பனைகள் என்னை இரவு முழுதும் விழிக்க வைத்திருக்கின்றன. உருகி அழ வைத்திருக்கின்றன. பெரும் களிப்பையும் ஏனைய சில தந்திருக்கின்றன.

சிலவேளைகளில் 20 - 25 பக்கங்களில் எழுதிக்கிழித்த பின்னரே ஒன்றரைப் பக்க அளவிலான உருவகத்தை எழுத முடிகிறது. இது எனது பலவீனமாயிருக்கலாம்.

வெறும் கற்பனையோ மொழி நயமோ உருவகத்தின் அடித்தளமாகக்கூடாது. இலட்சியத் தவிப்பொன்று உயிராக வீறிடவேண்டும். உயிரைக் கொடுத்து எடுப்பதே எழுத்து. இவ்வித எழுத்தே உருவகம் விரும்பும் உடன்பிறப்பு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



●● *திருக்குறளுடன் அதிகமான அளவுக்கு உங்கள் உணர்வுகள் ஒன்றியுள்ளன. இதுபற்றி......*

□□ என்னுடன் மிக நெருங்கி
நின்று உதவுபவர்
வள்ளுவப் பெருந்தகையே.
அவ்வள்ளலை நான் மனத்தினில்
இருத்தி வணங்குகின்றேன்.
எதையும் சுருக்கி விளக்கலாமென்ற
நெறியை எனக்கு இடித்துரைப்பவர்
அவ்வள்ளலே. வசன நடையின்
எளிமையையும் கவிதையின் உயர்வையும்
எவர்க்கும் வேண்டிய வாழ்வையும்
ஒருங்கே கொண்டது வள்ளுவம்.
அது நீதிநூல் மட்டுமல்ல - வாழ்க்கை
நூலுமாகும்.
அன்பையும் அறிவையும் தருவதுடன்
திருக்குறள் செயலையும் துணிவையும்
தருகிறது. நாட்டு நலனையும் அரசின்
தேவையையும் இடித்துக் கூறுகிறது.
ஒரு வேதனை என்னவெனில்
நாங்கள் திருக்குறளில் உள்ள நாட்டையும்,
போரையும், வீரத்தையும்,
வீறானசெயல்களையும்
காணத் தவறுவதேயாகும்.
இன்று நமக்கு வேண்டிய மிகத்
தேவையான இந்தப்பகுதிகளும் திருக்குறளில்
நிறைய உள்ளன. இந்தப் பகுதிகளை நாம்
வெளிக்கொண்டு வரவேண்டும்.
இதுவே எனது அவாவாகும்.

●● *உங்களில் ஆன்மீகப் பற்றுணர்வு நிறைந்துள்ளது. இதன் அடிப்படை என்ன?*

□□ சிறு வயதிலிருந்து இவ்வகைத்
தேட்டம் என்னுள் இருந்தது
உண்மையே. உள்ளத்தை உருக்கும்
திருவாசகம் போன்ற பாடல்களும்
வழிபாடும் துணைசெய்தன.
இதற்கும் ஏதோ ஒன்று எனக்கு
உதவி இருக்கிறது. உதாரணமாக
'கராட்டி' விளையாட்டையோ
பாடல் இசையையோ புத்தக மூலம்
பெற்றிட முடியாது. குருவின்
நேர்த்துணையும் தேவை.

1956 ஆம் ஆண்டளவில் சுவாமி
சச்சிதானந்த யோகீஸ்வரரின் கீழ்
பயின்றிடக் கிடைத்த 'வீராசனம்'
எனக்கு இன்றும் உதவுகிறது.
கிளிநொச்சி ஸ்ரீமத். வடிவேற்சுவாமிகளும்
திருக்கேதீஸ்வரம் சபாரத்தின
சுவாமிகளும் காட்டிய அன்பு - தொண்டு
மார்க்கங்கள் என்னைத்
திருத்துகின்றன. கொழும்பு
தானையான் சுவாமிகளின் வழிவந்த
அருணாசலம் சுவாமிகள் காட்டிய
தியான வழிமுறைகள்
பயன் தருகின்றன.

இவ்வித திடங்கள் பல. வேறெதையும்
கூறி விளக்க என் முன்னேற்றம் போதாது.

●● *உங்களின் இலட்சியங்களும், நீங்கள் சமுகத்துக்கு சொல்ல விரும்புவதும் செய்ய விரும்புவதும் என்ன?*

□□ எங்கள் தமிழினத்தின் நலிந்த,
சுதந்திரமிழந்த நிலை என்னை
வெகுவாக வாட்டுகிறது. இதற்காக இந்த
முதிய உடலையும் உணர்வையும்
ஆகுதியாக்க விழைகிறேன். எதிரி
எம்மை அழிக்க வருகின்றான். சில
இடங்களில் அவன் தற்காலிகமாக
அழித்தும் விட்டான். இந்த அவல
நிலையை நாம் நெஞ்சத்தால்
உணர்ந்திட வேண்டும். இந்த அவல
வரலாற்றைத் தடுக்கவல்ல வேலியும்
மதிலும் நாமேதான். அரண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிறர்கட்டித் தருவதல்ல.
நாடும் அவ்விதமே.

'நான் தப்ப, நான் தப்ப' எனும்
எங்கள் சுயநலப் போக்கு ஓர்
இழிகுணமாகக் கணிக்கப்படவேண்டும்.
எதிரியின் நாயாக சிலர்தானும் - இன்றைய
கட்டத்திலும் - வாழ வேண்டுமா?
தன்மானம்தான் இன மானத்தைக்
கொண்டுவர வல்லது. எம்மிடையே
இந்த இன உணர்வு பெருக வேண்டும்.
எம் இனம் போர்க்குணம்
பெறவேண்டும்.
இனம்படும் நலிவும் ஆயிரமாயிரம்
இளம் உயிர்களின் சாவும்
வீணுக்கல்ல. நாம் சுதந்திர
இனமாக - தமிழீழமாக - வாழவே
போகிறோம். இது உறுதி.
இதற்காக உழைப்பதே
என் விருப்பு.


**செய்நேர்த்தியும் நேர்மையும் உயர்த்தியது எம்மை
எங்கள் சேவை 25 வருடங்கள் பூர்த்தியாகின்றது
மகிழ்ச்சியாக இருக்கின்றது**

**குறித்த தவணையில், நல்ல முறையில்
உங்கள் ஆடைகளைப் புதுமைப்படுத்தித்
தருகின்றோம். கால் நூற்றாண்டு அனுபவம்
எமக்குண்டு.**

# சாயி உடைகள் உலர்வகம்

**146, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மங்கள வைபவங்களைத் திட்டமிடும்பொழுது
மனதில் வருவது 'அஜந்தாஸ்'

மங்கள வைபவங்களுக்கேற்ற
கூறைச் சேலைகள்
காஞ்சிபுரம்
பட்டு வேட்டிகள்
சேட்டிங், சூட்டிங்
கோவில் பட்டுக் குடைகள்
மற்றும்பல பிடவைத் தினுசுகளையும் வழங்குகிறது

அஜந்தாஸ்

உங்கள் எண்ணம்போல்
வண்ணப் புடவைகளை தந்திடும்
அஜந்தாஸிடம் வாருங்கள்.

# அஜந்தாஸ் பிடவை மாளிகை

54, பெரியகடை, யாழ்ப்பாணம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மனிதனும் வரலாறும்

## 3

இயக்கத்தின் இரகசியத்தை கண்டு பிடித்த ஹேகல், அதனைப் படைத்தலின் சூட்சுமமாகக் கொண்டார். பிரபஞ்சப் பேரான்மாவின் சிருஷ்டிப்பு வித்தையாகக் கண்டார். இதனால் அவரது இயங்கியல் தத்துவம் ஆன்மீக உலகத்தின் சிகரத்திலிருந்தே மனித வாழ்க்கையை நோக்குகிறது. இந்த நோக்கில், மனித வாழ்வும் மனித வரலாறும் தெய்வீகத் திருக்கூத்தாக அவருக்கு தென்பட்டது. இயங்கியலின் மூல விதிகளை நெறித்து, அந்தப் பிரமாதமான கண்டுபிடிப்பை வேதாந்த கருத்துலகில் புதைத்து விடுகிறார் ஹேகல்.

கார்ல் மார்க்சின் எழுத்துக்களில், ஹேகலின் இயங்கியல் விதிகள் பொருளுலகின் எதார்த்த களத்திற்கு கொண்டுவரப் படுகிறது. மெய்யுலகின் இயங்கு விதிகளாக அவை நிறுவப்படுகின்றன.

கார்ல் மார்க்ஸ் ஒரு பொருளியவாதி. பொருளுலகத்தையே மெய்யுலகமாகக் கொண்டவர். பொருளுலகத்திற்கே முதன்மை கொடுத்தவர். பொருளுலகத்திலிருந்தே மனவுலகம் தோற்றப்பாடு கொள்கிறது என்ற கருத்தைக் கொண்டவர். அவரது உலகப் பார்வை ஹேகலின் ஆன்மீக கருத்துலகிற்கு நேர்மாறானது.

ஹேகலின் தரிசனத்தில், வரலாறு என்பது ஒரு தெய்வீக சக்தி. மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி. மனித உலகத்திற்கு அந்நியமான சக்தி. மனிதனுக்கு புறம்பாக நின்று, ஆனால் அதே சமயம், மனித வாழ்வை நிச்சயித்து, நெறிப்படுத்தி, மனிதனுக்கு புலனாகாத ஒரு புனித பயணத்தில், பரிபூரணத்துவத்தை நோக்கிய பரிணாமப் பயணத்தில், மனிதனை வழி நடத்திச் செல்லும் ஒரு சக்தி. இது பிரம்மமாக, பிரபஞ்சப் பேரியக்கமாக, பிரபஞ்ச மனமாக, எங்கும் எதிலும் சர்வவியாபகம் கொண்டு எல்லாவற்றையும் இயக்குகிறது. இது ஒரு இயங்கு சக்தி. சிருஷ்டி சக்தி. இந்தத் தெய்வீக சக்தி இயங்கியல் சக்கரத்தில் சுழல்கிறது. இயங்கியல் விதிகளுக்கு அமைய இயங்குகிறது. இப்படியாக, ஹேகலின் தத்துவார்த்த எழுத்துக்கள் இயக்கத்தின் மூல விதிகளை பிரம்ம சூத்திரமாக மாற்றி, அதன் அடிப்படையில் மனித வாழ்விற்கும் வரலாற்றிற்கும் விசித்திரமான விளக்கங்கள் கொடுக்கிறது.

கார்ல் மார்க்சைப் பொறுத்தவரை, மனிதனின் பொருளிய வாழ்வே எல்லாவற்றிற்கும் மூலமானது. மனித மனமும், மனித உறவுகளும், மனித வாழ்வும், மனித வரலாறும் — எல்லாமே மனிதனின் பொருளிய வாழ்விலிருந்து பிரவாகமெடுக்கிறது. இந்தப் பொருளிய வாழ்வின் மூல இயக்கமாகவே இயங்கியலை நிறுவுகிறார் மார்க்ஸ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தப் பொருளிய வாழ்வு மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளால் நிர்ணயிக்கப்படுவதல்ல. மனிதனே பொருளுலகத்தைப் படைக்கிறான். மனித செயற்பாட்டின் மூலமே பொருளுற்பத்தி நிகழ்கிறது. இந்தப் பொருளுற்பத்தியில் நிகழும் ஒட்டுமொத்தமான உறவுகளின் கூட்டமைப்பாக பொருண்மிய கட்டமைப்பு உருவாக்கம்பெறுகிறது. அதுவே, சமூகத்தின் அடித்தளமாக அமைகிறது. பொருண்மிய வளர்ச்சிப் போக்கில், பொருள் உற்பத்தி வடிவங்களில் தோன்றும் மாற்றங்கள் சமூக அமைப்பிலும் மாற்றங்களை நிகழ்த்துகிறது. இந்த சமூக மாற்றத்தை நிகழ்த்திச் செல்லும் மாபெரும் இயங்கு சக்தியாக வரலாறு இயங்குகிறது. பொருண்மிய உறவுகளில் எழும் முரண்பாடும், அந்த முரண்பாட்டைக் களைந்துவிட மனிதர்கள் நிகழ்த்தும் போராட்டமும், அந்தப் போராட்டத்தால் நிகழும் சமூக மாற்றமுமாக வரலாறு நகர்கிறது. எனவே, வரலாறு என்பது சமூக மாற்றத்தை நிகழ்த்தும் இயங்கு சக்தி. இது பொருளுற்பத்திக் களத்திலிருந்து எழுவதால் அதனைப் பொருளிய வரலாறு அல்லது வரலாற்றுப் பொருளியம் (*HISTORICAL MATERIALISM*) என்கிறார் கார்ல் மார்க்ஸ். இந்தப் பொருளிய வரலாற்றை நகர்த்திச் செல்லும் இயங்கு விதிகளாக இயங்கியல் விதிகள் இயங்குகின்றன.

இயங்கியல் பற்றி விளக்கமான ஆய்வுரைகள் எதையும் கார்ல் மார்க்ஸ் எழுதிவிடவில்லை. ஆனால் அவரது தத்துவார்த்த எழுத்துக்களிலும், சமூக பொருண்மிய ஆய்வுகளிலும் இயங்கியல் கருத்தாக்கங்கள் செறிந்து கிடக்கின்றன. இயங்கியலை ஒரு விளக்கக் கோட்பாடாக, ஒரு ஆய்வுக் கருவியாகக் கையாண்டு சமூக மெய்யுண்மைகளை அவர் பிட்டுக்காட்டினார். இயங்கியல் ஆய்வு முறைமையின் (*DIALELTICAL METHODOLOGY*) ஒரு தலைசிறந்த உதாரணமாக அவர் எழுதிய 'மூலதனம்' விளங்குகிறது.

கார்ல் மார்க்ஸ், மனித சமூகத்தை ஒரு முரண்பாட்டுக் களமாகக் கண்டார். அவரது சமூக ஆய்வுகளில் இயங்கியலின் மூல விதியான முரணியம் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

சமூகம் என்பது தனிமனிதர்களைக் கொண்ட ஒரு பெரிய கூட்டுக் குடும்பம் அல்ல. எல்லா மனிதர்களும் ஒன்றுசேர்ந்து, ஒத்திசைவாக, ஒன்றித்திருக்கும் ஒரு சுவர்க்க பூமியும் அல்ல. சமூகம் என்பது முரண்பாடுகள் நிறைந்த ஒரு உலகம். வர்க்கம் என்றும், சாதி என்றும், மதம் என்றும், ஏழை என்றும், பணக்காரன் என்றும், ஆளுபவன் என்றும், ஆளப்படுபவன் என்றும், ஒடுக்குபவன் என்றும், ஒடுக்கப்படுபவன் என்றும், சுரண்டுபவன் என்றும், சுரண்டப்படுபவன் என்றும், ஆண் என்றும் பெண் என்றும், மனித உறவுகளில், சமூகப் பிரிவுகளில், எங்கும், எல்லாவற்றிலும் முரண்பாடு தலைதூக்குகிறது. சமூகமானது முரண்பாடுகள் நிறைந்த ஒரு போராட்டக் களம். கொந்தளிப்புகளும், நெருக்கடிகளும் நிறைந்த மனித உலகம். இந்த முரண்பாடுகளே சமூகத்தின் அசைவியக்கத்திற்கு காரணிகளாக இருக்கின்றன. இந்த முரண்பாடுகளின் இயல்புகளை இனம்கண்டு கொள்வதன் மூலமே சமூக அசைவியக்கத்தின் தன்மைகளைப் புரிந்துகொள்ளலாம். சமூக அசைவியக்கமாக கட்டவிழும் சமூக வரலாற்றின் போக்கினையும் அறிந்து கொள்ளலாம்.

மனிதர்களின் சமூக வாழ்வைப் பொறுத்தவரை, பொருளாதார வாழ்வே முக்கியமானது. பொருளுற்பத்தியே மனித வாழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வுக்கு ஆதாரமானது. மனித தேவைகளை நிறைவுசெய்வதும் அதுவே. இதனால், சமூகக் கட்டமைப்பில் பொருண்மிய அமைப்பிற்கே பிரதான இடத்தைக்கொடுக்கிறார் கார்ல் மார்க்ஸ். பொருண்மிய அமைப்பே பொருளுற்பத்தியின் மையம். அதுவே, சமூகத்தின் திண்ணிமான அடித்தளம். அந்த அடித்தளத்தின் மேற்தளமாகவே மற்றெல்லாம் இயங்குகிறது. பொருளிய வாழ்வே மனவுலகத்தையும் நிர்ணயிக்கிறது பொருளியப் புறநிலைகளின் வெளிப்பாடாகவே கருத்துலகமும் தோற்றப்பாடுகொள்கிறது.

பொருளுற்பத்தியின் வளர்ச்சிப்போக்கில், ஒரு கால கட்டத்தில், உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் மத்தியில் முரண்பாடு எழுகிறது. அந்த முரண்பாடு முற்றி, வர்க்கப் போராட்டம் தீவிரம் பெறுகிறது. சமூகப் புரட்சிக்கான புறநிலை தோன்றுகிறது. இறுதியில், சமூகப் புரட்சி வெடிக்கிறது. இந்தச் சமூகப் புரட்சியால் பொருண்மிய கட்டுமாணத்தில் மாற்றம் நிகழ்கிறது; உற்பத்தி உறவுகளில் மாற்றம் நிகழ்கிறது; சமூக வடிவத்தில் மாற்றம் நிகழ்கிறது. இதனால், புதிய சமுதாயம் பிறக்கிறது. இந்தப் புரட்சிகரமான சமூக மாற்றம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வாக இடம்பெறுகிறது. இந்த வரலாற்று நிகழ்வு சமூகத்தை ஒரு புதிய படிநிலை வளர்ச்சிக்கு இட்டுச்செல்கிறது. இப்படியாக, கார்ல் மார்க்சின் வரலாற்றுப் பொருளியக் கோட்பாடு, சமூக வரலாற்றுப் போக்கிற்கு விளக்கம் கொடுக்கிறது.

இந்த சமூக வரலாற்றுக் கோட்பாட்டில் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. இந்தக் கோட்பாடு பொருண்மிய நியதியை (*ECONOMIC DETERMINISM*) வலியுறுத்துகிறது என்பது சிலரது குற்றச்சாட்டு. அதாவது, பொருளாதாரக் கட்டுமாணமே சமூகத்தின் சகல அமைப்புகளையும், மனித மன உலகத்தையும் நிர்ணயிக்கும் சக்தியாகக் கொள்ளப்படுகிறது. இதில், மனித செயலாக்க சக்திக்கு மேலாக பொருளிய சக்தியே மேலோங்கி நிற்கிறது, என்பது இவர்களது வாதம்.

வேறு சிலர், மார்க்சின் வரலாற்றுப் பொருளியத்தை, தொழில்நுட்ப நியதி வாதம் எனவும் விமர்சிப்பதுண்டு. அதாவது, உற்பத்தி சக்தியில் தோன்றும் தொழில் நுட்ப வளர்ச்சியே சமூக மாற்றத்தை நிர்ணயிக்கும் சக்தியாக மார்க்ஸ் சித்தரிக்கிறார் என்பது இவர்களது குற்றச்சாட்டு. உற்பத்தி சக்தி என்பது உற்பத்தி சாதனங்களையும், மனித தொழிலாக்க சக்தியையும் குறிக்கும் உற்பத்தி சாதனங்களில் நிகழும் தொழில் நுட்ப வளர்ச்சியே பொருளுற்பத்தி உலகில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் காரணியாக அமைகிறது. ஆகவே, தொழில்நுட்பத்தில் ஏற்படும் வளர்ச்சியே சமூக மாற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்கும் வித்திடும் உந்து சக்தியாக விளங்குகிறது. எனவே, வரலாற்றின் இயங்கு சக்தியாக தொழில் நுட்பத்தையே கொள்ளவேண்டும் என்பது இவர்களது கருத்து.

இந்த விமர்சனங்களை எல்லாம் மார்க்சீயத்தின் பிதாமகர்களே நிராகரித்திருக்கிறார்கள். லெனினும் இது பற்றி நீண்ட விளக்கவுரைகள் எழுதியிருக்கிறார். அவற்றின் சாராம்சம் இது தான்.

பொருளாதார உறவுகளில் எழும்முரண்பாடு பிரதானமானது. ஆயினும் சமூக கட்டமைப்பின் பல்வேறு நிலைகளில், பல்வேறு பரிமாணங்களில், முரண்பாடுகள் தோன்றி வளர்கின்றன. சகல முரண்பாடுகளினதும் ஒட்டுமொத்தமான புறநிலை அழுத்தத்தால் புரட்சிகர சூழ்நிலை எழுகிறது. ஒடுக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படும் மக்களே இந்த முரணியங்களின் அழுத்தத்தால் ஈர்க்கப்படுகிறார்கள். சமூகத்தின் பெரும்பான்மையாக, சமூக உற்பத்தியின் படைப்பாளிகளாக விளங்கும் உழைக்கும் மக்களே, புரட்சிகர வர்க்கமாக, புரட்சிகர சக்தியாக செயற்படுகிறார்கள். எனவே, முரணியங்களின் போராட்டகளமாக வர்க்கப் போராட்டம் அமைகிறது. இந்த வர்க்கப் போராட்டமே வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது. வர்க்கப் போராட்டமே சமூகப் புரட்சிக்கும் சமூக மாற்றத்திற்கும் ஏதுவாக இருக்கிறது. வர்க்கப் போராட்டம் என்பது தானாக, தன்னியல்பாக சமூகப் புரட்சியை தோற்று விப்பதல்ல. வர்க்கப் போராட்டம் என்பது அணிதிரட்டப்பட்ட வெகுசன சக்தியாக எழுச்சி கொள்ளும் புரட்சிகர வர்க்கத்தின் போராட்டம். வெகுசனத்தை அணிதிரட்டவும், போராட்டத்தை முன்நகர்த்திச் செல்லவும், புரட்சியை நடத்தவும், ஆட்சியைக் கைப்பற்றவும், சமூகத்தில் மாற்றத்தை நிகழ்த்தவும் ஒரு புரட்சிகர இயக்கம் வேண்டும். இந்தப் புரட்சிகர இயக்கமும் அதன் பின்னால் அணிதிரளும் மக்களுமே புரட்சியை நடத்த முடியும். வரலாற்றை நகர்த்த முடியும்.

*சமூகம் என்பது சிக்கலான மனித உறவுகளைக்கொண்ட ஒரு புதிரான உலகம். எத்தனையோ எதிர்வு சக்திகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து, ஒன்றோடு ஒன்று முரண்பட்டு, அந்த முரண்களின் முகங்கள் தெரியாதவாறு ஒன்றோடு ஒன்று ஒன்றித்துநின்று. ஒருபொய்யான தோற்றப்பாட்டுடன் சமூகம் இயங்குகிறது.*

கார்ல் மார்க்ஸ் ஒரு வரலாற்று ஆசிரியர் மட்டுமன்றி ஒரு சமூகப் புரட்சியாளரும் ஆவார். அவர் சமூக உலகத்திற்கும் வரலாற்றுக்கும் விளக்கக் கோட்பாடுகள் அளித்ததோடு நின்று விடவில்லை. அவர் சமூகத்தை உலகத்தை மாற்றியமைக்க விரும்பினார். முதலாளிய ஒடுக்கு முறையிலும், சுரண்டல் முறையிலும் சிக்குப்பட்டு சீரழியும் மனிதர்கள் விடுதலையடைந்து ஒரு உன்னதமான சமூக அமைப்பை கட்டி எழுப்பவேண்டுமென ஆவல் கொண்டவர். எனவே, அவர் சமூகப் புரட்சி பற்றி எழுதினார். சமூகச் செயற்பாட்டை வலியுறுத்தினார்.

சமூக மெய்மையை, அதன் முரணிய தன்மைகளை, அதன் அசைவியக்கத்தை ஆழமாகப் பார்க்கும் ஆய்வுக் கருவியாக அவர் இயங்கியலைக் கையாண்டார். இயங்கியலில் நெறிக்கப்பட்ட சமூக அறிவியற் கோட்பாடு சமூக நிதர்சனத்தை துல்லியமாகக் காட்ட வல்லது; சமூக வரலாற்று இயக்கத்தை வெளிப்படுத்த வல்லது, என்பது அவரது கருத்து. விளக்கக் கோட்பாடுகள் சமூக உண்மைகளை திரைநீக்கம் செய்துகாட்டலாம். ஆனால் செயற்பாடு தான் சமூகத்தை மாற்றியமைக்க வல்லது. ஆகவே, கோட்பாடும் செயற்பாடும் ஒன்றித்து நிற்பதுதான் புரட்சிகர நடவடிக்கைக்கு இன்றியமையாதது என்பது அவரது நிலைப்பாடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில் மார்க்சின் சிந்தனைப் பாரம்பரியத்தை சமூகப் புரட்சிக் களத்திற்கு எடுத்துச் சென்றவர்களில் லெனினும் மாவோவும் முக்கியமானவர்கள். அக்டோபர் புரட்சிக்கு முற்கால ரஷ்ய சமூக அமைப்பை இயங்கியல் கோட்பாட்டின் அடிப்படையில் தெளிவாக விளக்கினார் லெனின். ரஷ்ய சமூகத்தில் அன்று நிலவிய பன்முக முரண்பாடுகளை ஆழமாக எடுத்து விளக்கி, புரட்சிக்கான புறநிலைத் தன்மைகளை அவர் சுட்டிக் காட்டினார். சமூக எதார்த்த நிலைகளை விளக்குவதோடு நின்றுவிடாது. சமூக மாற்றத்திற்காக புரட்சிகர வேலைத்திட்டத்தையும் நெறிப்படுத்தி, அதைச் செயற்படுத்தியும் காட்டினார். இதேபோன்று சீன சமூக உலகத்தையும், அதன் முரண்பாட்டுக் கோலங்களையும் மிகவும் துல்லியமாக விளக்கினார் மாவோ. விவசாய வர்க்கத்தின் கட்டமைப்பையும், அந்த வர்க்கத்தில் நிலவிய பிரிவுகளையும், பிளவுகளையும், முரண்களையும் ஆழமாக ஆராய்ந்து, அந்த முரண்களை அகற்றும் செயற்திட்டமாக புரட்சிக் கோட்பாடுகளை அவர் உருவாக்கினார் முரணியம்பற்றி அவர் எழுதிய கட்டுரை, இயங்கியல் ஆய்வு முறைக்கு ஒரு தலைசிறந்த விளக்கவுரையாகக் கருதப்படுகிறது.

சமூகம் என்பது சிக்கலான மனித உறவுகளைக் கொண்ட ஒரு புதிரான உலகம். எத்தனையோ எதிர்வு சக்திகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து, ஒன்றோடு ஒன்று முரண்பட்டு, அந்த முரண்களின் முகங்கள் தெரியாதவாறு ஒன்றோடு ஒன்று ஒன்றித்துநின்று, ஒரு பொய்யான தோற்றப்பாட்டுடன் சமூகம் இயங்குகிறது. இந்தத் தோற்றப்பாட்டிற்கு அப்பால், மறைபொருளாக ஒளிந்திருக்கும் சமூக மெய்யுண்மைகளை இனம்கண்டு அறிவதற்கு இயங்கியல் ஆய்வு இன்றியமையாதது. இதில் முரணிய விதி முக்கியமானது. அதுவே சமூக இயக்கத்தின் இரகசியங்களை வெளிக்காட்ட வல்லது. இந்த முரணியம் ஒருமுகத்தன்மை கொண்டதல்ல; அது பல்முகப் பரிமாணங்களைக் கொண்டது, என விளக்குகிறார் மாவோ.

சிக்கலான வர்க்க உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகத்தில், முரண்பாடுகளும் சிக்கலானதாகப் பின்னப்பட்டிருக்கின்றன. இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக, ஒன்றன்மீது ஒன்று தாககம் விளைவிப்பதாக, சமூக இயக்கத்தின் நீரோட்டமாக அசைகின்றன. இந்த சமூக முரண்பாட்டு உலகத்தை பல ரகங்களாக வகைப்படுத்துகிறார் மாவோ. பிரதான முரண்பாடு என்றும், இரண்டாம்தர முரண்பாடுகள் என்றும், பகை முரண்பாடு என்றும், சினேக முரண்பாடு என்றும், சமநிலையற்ற வளர்ச்சிப் போக்குடைய முரண்பாடு என்றும் இவை நிரைப்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றன. நதிகள் சமுத்திரத்தில் சங்கமாவது போன்று, எல்லா முரண்பாடுகளுமே பிரதான முரண்பாட்டைச் சந்திக்கின்றன அதற்கு முண்டு கொடுத்து நிற்கின்றன. இந்தப் பிரதான முரண்பாடு முக்கியமானது. அது முற்றிக் கனியும்போதே புரட்சிகரப் புறநிலை பிறக்கிறது. இந்தப் பிரதான முரண்பாட்டையும் அதோடு பிணைந்து நிற்கும் ஏனைய முரண்பாடுகளையும் இனம்கண்டு கொள்வதன் மூலமே சமூக உலகத்தை ஆழமாகத் தரிசித்துக்கொள்ள முடியும் என்கிறார் மாவோ.

முரணியக் கோட்பாட்டை விரிவுபடுத்தி, அதனைச் செழுமைப்படுத்த, மாவோ, லெனின் போன்றோர் நிகழ்த்திய சமூக ஆய்வுகளை உதாரணம்காட்டி, ஹேகலின் இயங்கியலுக்கும் மார்க்சிய இயங்கியலுக்கும் அடிப்படையான, அமைப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரீதியான வேறுபாடு உண்டு என வாதிக்கிறார் அல்தூசர். ஹேகலின் தத்துவம் கருத்துலகம் சார்ந்தது; ஆன்மீகமயமானது. ஆனால் கார்ல் மார்க்கின் வரலாற்றுடப் பொருளியமானது ஒரு சமூக விஞ்ஞானக் கோட்பாடு; அது சமூக வரலாற்றிற்கு விஞ்ஞான ரீதியான விளக்கத்தைக் கொடுக்கிறது, என்பது அல்தூசரின் வாதம்.

மார்க்சியத்தை ஒரு வரலாற்று விஞ்ஞானக் கோட்பாடாக நிறுவுவதாயின் கார்ல் மார்க்சின் சிந்தனை உலகிலிருந்து ஹேகலின் 'ஆவியை' விரட்டவேண்டும். அல்தூசரின் தத்துவார்த்த எழுத்துக்கள் இந்தக் கைங்கரியத்தையே செய்ய முனைகிறது. அத்தூசரின் தத்துவம் நவ மார்க்சிய சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையை எழுப்பியது இந்தச் சர்ச்சையையும், அதன் வாதப் பிரதிவாதங்களையும் விளக்கிக் கூறுவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. நாம் இங்கு எடுத்துக்கொண்ட விடயம் ஹேகலின் தத்துவமும் அது மார்க்சிய வரலாற்றியலில் ஏற்படுத்திய தாக்கமுமாகும். ஹேகலின் சிந்தனையை மார்க்சியம் எந்த அளவுக்கு உள்வாங்கியிருக்கிறது என்பதுபற்றியே நாம் இங்கு பார்க்கிறோம். இந்தச் சிந்தனை வரம்பிற்குள் நின்றே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

கார்ல் மார்க்சின் சிந்தனையை இரு கால கட்டங்களாகப் பிரித்து, ஒன்றை இளம் மார்க்சின் தத்துவார்த்த எழுத்துக்கள் என்றும், மற்றதை முதிய மார்க்சின் விளக்கக் கோட்பாடுகள் என்றும் இருவகைப் படுத்துகிறார் அல்தூசர். முன்னது கருத்துலகம் சார்ந்தது; பின்னது விஞ்ஞான உலகம் சார்ந்தது; முன்னதில் ஹேகலின் தத்துவப் பிசாசு ஆட்கொண்டிருக்கிறது; பின்னதில் அது விரட்டப்பட்டுவிட்டது. முன்னது தத்துவ விமர்சனம்; பின்னது வரலாற்று விஞ்ஞானம். இப்படியாக மார்க்சின் எழுத்துலகை இரு கூறுகளாகப் பிரித்து, இடையே ஒரு சிந்தனை முறிவு ஏற்பட்டுள்ளதாக வாதாடுகிறார் அல்தூசர்.

இந்த வாதம் வலிமையற்றது. ஏற்றுக் கொள்ளமுடியாதது. ஏனென்றால், அல்தூசர் கூறுவதுபோல மார்க்சின் எழுத்துக் களில் ஒரு அடிப்படையான சிந்தனை முறிவு (EPISTEMOLOGICAL BREAK) ஏற்பட்டதாகச் சொல்லிவிட முடியாது. அவரது எழுத்துக்களில் ஒரு சிந்தனைத் தொடர்ச்சி இருக்கிறது; பரிணாம வளர்ச்சி இருக்கிறது. இளம் பராயத்தில் அவர் தத்துவம்பற்றி எழுதினார். முதிய காலத்தில் பொருண்மியம்பற்றி எழுதினார் ஆயினும் அவரது தத்துவப் பார்வை, உலகப் பார்வை, அவரது முதிர்ந்த கால எழுத்துகளிலும் ஆழமாக வேர் பதித்து நிற்கின்றன. ஹேகலின் இயங்கியல் இந்தச் சிந்தனைத் தொடர்ச்சிக்கு ஆதாரமாக நிற்கிறது.

ஜேர்மானிய தத்துவம், பிரஞ்சு அரசியல், பிரித்தானிய பொருண்மியம் என்ற ரீதியில், அவர் காலத்திற்கு காலம், அந்தந்த நாடுகளில் வாழ்ந்தபோது, அந்தந்த நாடுகளின் வரலாற்றுப் புறநிலைகளாலும் சிந்தனைப் போக்காலும ஈர்க்கப்பட்டு, அந்தந்தத் துறைகள்பற்றி எழுதினார். அவர் எங்கு சென்றாலும், எதனை எழுதினாலும், ஹேகலின் 'ஆவி' அவரைப் பின்தொடர்ந்தது. அந்த 'ஆவி தான் இயங்கியல் தத்துவம். அது அவரது எல்லா எழுத்துக்களிலும் ஆட்கொண்டு நிற்கிறது.

முதிர்ந்த பருவத்தில் அவர் பிரித்தானியாவில வாழ்ந்தபோது, ஆங்கிலேய பொருண்மிய உலகத்தின் அராஜகப் போக்கு அவரை ஆழமாகப் பாதித்தது. பல வருடங்களை லண்டன் 'மியூசியம்' நூலகத்தில் செலவிட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் 'மூலதனத்தை' எழுதினார். புதிதாகப் பொருண்மிய விளக்கக் கோட்பாடுகளைப் படைத்தார். முதலாளிய உற்பத்தி உலகத்தின் முரணிய தன்மைகளையும் இயங்கு விதிகளையும் எடுத்து விளக்கினார். வரலாற்றுப் பொருளியத்தின் அத்திவாரத்தை அமைத்தார் அல்தூசரால் சமூக விஞ்ஞானமாக சித்தரிக்கப்படும் மார்க்சின் வரலாற்றுப் பொருளியமும் இயங்கியல் தத்துவத்தின் அத்திவாரத்தில்தான் கட்டப்பட்டிருக்கிறது. ஆன்மீக மாயையிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட ஹேகலின் இயங்கில் விதிகளே மார்க்சிய வரலாற்றியலின் தூண்களாக நிற்கின்றன.

(தொடரும்)


- இனிப்புகளின் உலகம் எது தெரியுமா?
- விஜயா ஸ்டோர்ஸ்
- உண்மைதான். 'விஜயா ஸ்டோர்ஸ்'

பிஸ்கற் வகைகள்
ரொபி வகைகள்
இனிப்பு வகைகள்
மற்றும் ஆடம்பரப் பொருட்களை
குறைந்த விலையில் உங்களின் தேவைக்கேற்ப
விஜயா ஸ்டோர் வழங்குகிறது.

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளுங்கள்

# விஜயா ஸ்ரோர்ஸ்

64, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

"டேய், இஞ்சை வாடா"

குரல் வந்த திசையைப் பார்க்க மகிந்தனுக்கு பயமாக இருந்தது. ஏற்கனவே பதற ஆரம்பித்த மனம் மேலும் பரிதவிப்புக்கு உள்ளானது.

"டேய் உன்னைத்தான்ரா" - மீண்டும் வெடித்துச் சிதறியது அந்தக் குரல். மகிந்தனின் சைக்கிள் ஓட்டம் தடைப்பட்டது. சைக்கிளை விட்டு குதித்து திரும்பினான்.

கிளைகள் பரவி சடைத்திருந்த நிழல் வேம்பின் கீழ் இருந்த சீமெந்து இருக்கையில் ஆறேழு பேர் இருந்தார்கள். ஒருவர் தோளை ஒருவர் தழுவியபடி. இரண்டொருவர் கைகளில் மட்டும் பிளாஸ்டிக் பைல்கள்.

அப்பால் இருந்த நிழல் வாகை மரத்தின் கீழ் ஆணும் பெண்ணுமாக ஒரு ஜோடி சூழலை மறந்திருந்தனர். அப்பால் விரிந்திருந்த புல்வெளியிலும் பலர்.

வியர்க்கத் தொடங்கிய கையில் இருந்து சைக்கிள்கான்டில் வழுக்கத் தொடங்கியது. லேஞ்சியை எடுத்து முகத்தைத் துடைக்க மனம் நினைத்தது.

"நில்லடா உதில" என்றான் சிவப்புச் சேட் போட்டவன். அவன் சொன்ன 'டா' வில் அதிக வெப்பம் இருந்தது. மகிந்தன் நின்றான்.

"என்ன பார்வை ஒரு மாதிரியாய் இருக்கு"

# அறிமுகமாதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''இதுக்குள்ள வந்தவுடனே சைக்கிள் ஓடக்கூடாதெண்டு தெரியாதோ?''

''பழக்க வழக்கம் தெரியாதவனா இருக்கிறியேடா''

வார்த்தைகள் துப்பாக்கி ரவைகளாக அவர்களில் இருந்து பாய்ந்து தாக்கத் தொடங்கியது.

நிலமை மோசமாகி வருவதை மகிந்தன் உணர்ந்தான். எந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது. உயிரழிவையே தலையாய நோக்கமாகக் கொண்டு நடக்கும் விமானத் தாக்குதல் போல இதுவும்..

''எடேய், ஏன்ரா பேசாமல் நிக்கிறாய்?''

''டேய், எந்தப் பட்டிக்காட்டு ஊரில இருந்து வந்தனியடா?''

மகிந்தன் தலை நிமிர்ந்தான். விழிகளின் ஓரங்கள் மின்னின. அதி அற்புதமான அவன் ஊரின் காட்சிகள் கண்ணெதிரே துளிர்த்தது.

☐☐

வெய்யில் வரட்டும் காலமாதலால் வாய்க்காலில் அதிக தண்ணீர் இல்லை. பசுமைகுன்றி நரைத்திருந்த புற்கள் வாய்க்கால் வரம்பில்.

நாலைந்து எருமைகள் முழுச் சோம்பேறித் தனத்துடன் வாய்க்கால் தண்ணீரில் ஊறிக் கொண்டிருந்தன. சற்றுத் தூரத்தில் கூட்டமாக இருந்த சிறுவர்கள் தண்ணீரில் குதித்துக் குதித்து கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர்.

மாலை முகத்தில் மஞ்சள் கலந்து விசிறியதால் வயல்கள் பொன்னாய் மின்னியன. வயல்களிற்கு அப்பால் மஞ்சளாய் இரத்தச் சிவப்பாய், செம்மஞ்சளாய், கருநீலமாய், மலர்கள் நிறைந்த செடிகளும், கொடிகளும் பூத்து நிற்க காடு எழில் முகம் காட்டி நின்றது.

வெய்யில் எட்டிப் பார்த்த ஓலைக் கூரையை அண்ணாந்து பார்த்த மகிந்தன் உற்சாகம் மிக்கவனாய் இருந்தான். வெள்ளையும் கறுப்புமாய் பளீர் என மின்னும் இரண்டு ஆட்டுக்குட்டிகள் வேலியோரம் துள்ளி விளையாடின.

காட்டுத்தடியால் கட்டப்பட்ட வேலியில் அவரையும் பிசுக்கையும் அடர்த்தியாகப் படர்ந்திருந்தன. மொந்தனும், கப்பல், கதலி என வாழைகள் சூழலைக் குளிர்மைப் படுத்தின.

குசினிக்குள் அவன் அம்மா இரும்புச் சட்டியில் எதையோ வதக்கிக் கொண்டிருந்தாள். அதன் வாசம் மூக்கினூடாகச் சென்று வயிற்றைச் சுகம் விசாரித்தது.

''தம்பி'' என்றாள் அம்மா.

''என்னம்மா'' - மகிந்தன்.

''ஐயாவை ஏன் இன்னும் காணேல்லை'' -

''அவர் வாறநேரந்தான் அம்மா'' என்று மகிந்தன் சொன்னபோது வயல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரம்புகளின் வழியே மூன்று பேர் நடந்து வருவது தெரிந்தது. அதில் கடைசியாக வருவது அவன் ஐயா தான். அவருக்கு முன் கந்தையாப் பெரியப்பாவும் பக்கத்து வீட்டு செல்லத்துரை மாமாவும் தான்.

கட்டைக் காற்சட்டை, கையில்லாத பெனியன் சகிதம் ஐயாவைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

நீண்ட கால பயிற்சியினால் ஏற்கனவே இருந்ததைவிட ஐயா இப்போது உற்சாகமாகத் தெரிந்தார். தோளில் துப்பாக்கியை வைத்திருந்த லாவகத்திலும் அது தெரிந்தது.

நடந்து வருகின்ற மூன்று பேரிலும் ஐயாதான் வயது குறைந்தவர், ஐம்பந்தைந்து வயது போன மாதம் முடிந்ததென அம்மா சொன்னதாக ஞாபகம், கந்தையாப் பெரியப்பாவுக்கு அறுபது வயதுக்கு மேல் இருக்கும். துணைப் படைப் பயிற்சிக்கு போட்டி போட்டுக் கொண்டு ஆட்கள் போன போது முன்னுக்கு நின்றவர் அவர் தான்.

''அம்மா, ஐயா வாறார்'' - என்றான் வெகு சந்தோசத்துடன் மகிந்தன். குசினிக்குள் பாத்திரங்கள் அடிபடும் சத்தம் கேட்டது. அதனைத் தொடர்ந்து அம்மா வெளியே வந்தாள்.

ஐயாவும், மற்ற இரண்டு பேரும் வீட்டுக்குச் சமீபமாக வர காட்டுப் பக்கமாக நின்ற சில மாடுகள் மிரண்டு கொண்டு வந்தன.

காட்டுப்பக்கம் ஏதோ நடந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள முன்னரே வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின. மாடுகள் முன்பை விட வேகமாப் பாய்ந்து ஓடத் தொடங்கின.

ஐயாவும் மற்றவர்களும் சட்டென்று நின்றார்கள். தங்களிற்குள் குசு குசுவென்று கதைப்பது தெரிந்தது.

''அங்காலை பிரச்சனை போல''- என்றான் மகிந்தன் அம்மாவைப் பார்த்து. மலர்ச்சியுடன் காணப்பட்ட அம்மாவின் முகம் அச்சத்தினைப் பிரதிபலிக்க ஆரம்பித்தது. நிலமையினை அம்மா புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்தும் வீட்டுக்காரர் வெளியே வர ஆரம்பித்தனர். வாய்க்காலில் கும்மாளமடித்துக் கொண்டிருந்த சிறுவர்கள் கூட தமது கும்மாளத்தை நிறுத்தி விட்டார்கள்.

''தம்பி நாங்கள் என்னெண்டு பாத்துக் கொண்டு வாறம்'' என்ற ஐயா விரைவாகத் திரும்பி நடக்கத் தொடங்கினார். மற்றவர்களும் அவரைத் தொடர்ந்தனர்.

''ஐயா ஏன்ரா தம்பி திரும்பிப் போறார்? அங்கை வேறை ஆக்கள் இருப்பினம்தானே?'' என்றாள் அம்மா, அதற்கு மகிந்தன் பதிலேதும் சொல்லவில்லை. ஐயாவின் குணம் அவனுக்குத் தெரியும். ஐயா மாத்திரம் அல்ல, ஐயாவைப் போல பயிற்சி எடுத்த அத்தனை பேரும் அவர்களின் கிராமத்தின் எல்லையில் ஏற்படும் எந்தச் சிறு பிரச்சனைக்கும் முகம் கொடுக்க முன்னுக்கு நிற்பார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வயல் வெளியின் விளிம்பில் ஐயா போய் மறைவதற்கு முன்னர் ஒரு தடவை திரும்பி கையைக் காட்டி விட்டுப் போனார்.

காட்டின் அழகையும் அமைதியையும் மீறி தொடர்ச்சியான துப்பாக்கி, ஷெல் சத்தங்களும் முன்பை விடத் தீவிரமாகக் கேட்க ஆரம்பித்தன.

□□

மகிந்தன் சைக்கிளை உறுதியாகப் பிடித்திருந்தான். சீமெந்து இருக்கையில் அமர்ந்திருந்த அவர்களில் இரண்டு பேர் எழும்பி அவனை நோக்கி வர முற்பட வேறு ஒருவன் அவர்களைத் தடுத்தான்.

''பொறுங்கோ, நீங்கள் என்ன போறது, அவன் வரட்டும்''

''டேய், சைக்கிளை உதில நிப்பாட்டிப் போட்டு இஞ்சை வாடா'' ஆணை பிறந்தது. மகிந்தனின் சைக்கிளிற்கு ஸ்ராண்ட் இல்லை. எப்படி நிற்பாட்டுவது?

''சைக்கிளுக்கு ஸ்ராண்ட் இல்லை எண்டால் உதில போட்டிட்டு வா'' என்றான் அவர்களில் ஒருவன்.

மகிந்தனுக்கு சைக்கிளைப் போட மனம் வரவில்லை. எதுவுமே செய்யாமல் பேசாமல் நின்றான்.

விரைந்து வந்த சிவப்புச் சேட்டுக்காரன் காலால் மகிந்தனுடைய சைக்கிளை ஓங்கி உதைய அது பெரும் கூப்பாடு போட்டுக் கொண்டு தரையோடு சரிந்தது.

''டேய், வரச்சொன்னா வாறதுக்கென்னடா? உனக்கு அவ்வளவு திமிரோ''?

''நடக்கிறது பிரச்சினையெண்டாதவண்டு வாடா'' என ஒவ்வொருவர் ஒவ்வொன்றைச் சொல்லத் தொடங்க மகிந்தனின் நிலை முன்பை விடச் சிக்கலானது.

சிறிது நேரம் அமைதி நிலவியது. அந்த அமைதி அவர்களிற்குப் பயங்கர கோபத்தை உண்டு பண்ணியிருக்க வேண்டும்.

''உவனைக் கொண்டு வாங்கடா அங்கை போவம்'' என்றபடி ஒருவன் எழுந்தான். அவன் காட்டிய திசையைப் பார்த்தான் மகிந்தன்.

''இஞ்சை என்னத்துக்கெடா வந்தனி''

''பழக்க வழக்கம் தெரியாத உனக்கென்னடா படிப்பு?''

மகிந்தனின் முதுகைப் பிடித்துத் தள்ளியபடி ஒருவன் சொன்னான்.

□□

கருநீல நிறமாகப் பிரகாசித்த வானத்தில் நட்சத்திரங்கள் சுதந்திரமாகப் புன்னகைத்தன. புகையடித்தாற் போன்று பனி பரவிக் கொண்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ருந்தது. குருவி ஒன்று தனித்து சீராக சத்தமிட்டவாறு தொலை தூரம் பயணித்தது.

வீட்டின் முன் திண்ணையில் குப்பி விளக்கில் மகிந்தனின் தம்பி படித்துக் கொண்டிருந்தான். விடாமல் துளைத்துக் கொண்டிருந்த பனிக்குளிர் அவன் வெற்றுடம்பைத் தாக்கினாலும் அவனில் எந்த விதமான பாதிப்பும் இல்லை.

பகலில் அவன் படிப்பும் மரத்தின் கீழ் தான். விமானங்கள் குண்டுகளைத் தள்ளித் தள்ளி பள்ளிக்கூட அத்திவாரத்தையே பதம் பார்த்த பின்னர் மர நிழல் அவனைப் போன்ற பிள்ளைகளின் வகுப்பறைகள் ஆகி விட்டன.

மகிந்தனும் அந்தப் பள்ளிக்கூடத்தில் தான் படித்தான். உயர் வகுப்புக்கு மட்டும் கிராமத்தை விட்டு வெளியே போனான்.

திண்ணைச் சுவரோடு சாய்ந்திருந்த ஐயா இருமிக் கொண்டு மகிந்தனைப் பார்த்தார். குப்பி விளக்கின் ஒளியில் அவரின் பார்வை துல்லியமாக இருந்தது.

''தம்பி, வாற புதன்கிழமை வெளிக்கிட்டாச் சரிதானே'', மகிந்தன் பதில் சொல்லவில்லை அவன் பதில் சொல்லாத காரணத்தை ஐயா உணர்ந்திருக்க வேண்டும்.

''ஏன்ரா தம்பி பேசாமல் இருக்கிறாய்''? மகிந்தன் இப்போதும் மௌனம் சாதித்தான். அவர்களின் உரையாடலுக்கு தன்படிப்பு இடையூறாக இருக்குமோ எனப் பயந்து மகிந்தனின் தம்பி, தான் வாசித்த சத்தத்தைக் குறைந்துக் கொண்டான்.

''தம்பி எனக்கு உன்ர மனநிலை விளங்குதெடா. நீ வீணாய் மனத்தைக் குழப்பிக் கொண்டிராமல் படிக்கப்போ. நாங்கள் எல்லாம் இங்கை இருக்கிறம் தானே''

மகிந்தன் ஐயா சொன்னதைக் கேட்டான். ''தம்பி'' என்றார் ஐயா. அவர் குரலில் இழையோடிய அன்பின் தாக்கத்தினை தாங்கிக் கொள்ள முடியாத மகிந்தன் ''ம்'' என்றான்.

தன் முன்னால், தோற்றத்தில் தன்னையும் மிஞ்சி நிற்கும் மகனை ஐயா ஆர்வத்துடன் பார்த்தார். ''அடுத்த தலை முறையாவது நிம்மதியாக வாழ வேண்டும் என்று தானே என்னைப் போன்றவர்கள் இந்த வயதிலும் போராட்டத்தோடு இணைந்திருக்கிறோம்'' என நினைத்த போது-

''ஐயா, நான் போறன்'' என்றான் மகிந்தன்.

□□

சொல்ல முடியாத வெட்கமும் வேதனையும் மகிந்தனுக்கு ஏற்பட்டது. பட்டன் இரண்டு அறுந்து விட்டதால் சேட் ஆவென்று வாய் பிளந்திருந்தது.

நடக்கவே இயலாமல் இருந்தது. என்றாலும் மனத்தில் ஒரு உறுதி பிறந்தது. ''அடுத்த வருசம் நான் வாங்கினதை ஒருத்தருக்கும் குடுக்க மாட்டன்'' □□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உங்களின் பல தேவைகளைப் பூர்த்தி செய்கிறது

வெஸ்கோ

ஆங்கில மருந்து வகைகள், அழகுசாதனப் பொருட்கள்,
பால் மா வகைகள் என எல்லாவற்றையும் ஒரே மையத்தில்
வழங்குகிறது 'வெஸ்கோ'

வெஸ்கோ

மருந்தகம் – அழகு அகம்
470, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.


---


நேற்று நீங்கள் வாங்கியதை விட
இன்று புதிய டிசைன்களில் அழகிய பாதணிகள் வந்துள்ளன
ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லோருக்கும்
விரும்பிய விதங்களில், புத்தம் புதிய டிசைன்களில்
அழகுமிகு பாதணிகள்

பி(F)ராங் எம்போறியம்

16, 38, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


---


மிதிவண்டிகள், அதன் உதிரிப்பாகங்கள்
இன்னும் ரயர், ரியூப் மற்றும் பல தரப்பட்ட வாணிபப்பொருட்களும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

E. S. பேரம்பலம் & கோ

50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஆறுமுகம் சிற்பாலயம்

ஈழத்தின் சிற்பக்கலை முன்னோடிகள்

சித்திரத் தேர்கள்
அழகு மஞ்சங்கள்
எழிலான வாகனங்கள்
அற்புத சிற்ப வேலைகள்
தெய்வீக விக்கிரகங்கள்

மற்றும் அனைத்து சிற்ப வேலைகளுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்
சிற்பகலாமணி ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி

ஆறுமுகம் சிற்பாலயம்
காளி கோவிலடி
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்